REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 340 ஐப்பசி 20 ஆம் நாள் வியாழக்கிழமை 05 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## அமெரிக்க தேர்தலில் முன்னிலையில் பிடென்

20 ▶



# உயிரிழப்பு அதிகரிக்கலாம்! நாடு முற்றாக முடங்கலாம்!!

## மருத்துவ சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 5

கொரோனா நோயாளர்களை அடையாளம் கண்டு கொள்ள முன்னெடுக்கப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் தாமதமாகின்றமையே தொற்று நாடு முழுவதும் பரவக் காரணமாகும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. 19 ▶

## கொரோனா சாவு 24

கொழும்பு, நவ. 5

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24ஆக உயர்ந்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நிலை 19 ▶

*முச்சந்தி முரளி*

"அப்போ அமெரிக்க மைத்திரிக்கு அங்கத்தைச் சனம் வைச்சிட்டுதோ ஆப்பு?"



## பஸ்களில் பயணிப்பவர்கள் இலக்கங்களைக் குறிக்கவும்

### வடக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

அரச மற்றும் தனியார் பஸ்களில் பயணிப்பவர்கள், தாம் பயணிக்கும் பஸ்களின் இலக்கங்களையும் பயணிக்கும் திகதிகளையும் குறித்து வைத்திருத்தல் வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் பணித்துள்ளார். அதற்கேற்ப பஸ்களின் உரிமையாளர்கள் 19 ▶

## மாவட்டத்துக்குள் மட்டும் தனியார் பஸ்கள் சேவை

### *சங்கங்களின் ஒன்றியம் தீர்மானம்*

யாழ்ப்பாணம், நவ. 5

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் போக்குவரத்துக்களை மாவட்டங்களுக்குள்ளேயே மட்டுப்படுத்தி மக்களுக்கு சேவை வழங்குவது என்று மாகாண பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி யுள் 19 ▶

## நோயறி கருவிகள் 2 லட்சம் வந்தன

கொழும்பு, நவ. 5

கொரோனா பரிசோதனைக்கு தேவையான 2 லட்சம் ஆன்டிஜென் நோயறி கருவிகள் (PCR Antigen Rapid 19 ▶



## மர்மமான முறையில் மன்னாரில் அதிகாரி சாவு!

### *கொலை என்று சந்தேகம்*

மன்னார், நவ. 5

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் கிராம அலுவலர்களுக்கான பதில் நிர்வாக அலுவலராகக் கடமையாற்றும் ஒருவர் மர்மமான 19 ▶

## யானை தாக்கி யாழ்.வாசி சாவு

கொழும்பு, நவ.5

மாங்குளம் மல்லாவி வீதியில் யானை தாக்கி யாழ்ப்பாணவாசி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆனந்தராசா விஜியானந்தன் (வயது37) என்பவரே உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை கற்கோவளத் 19 ▶

## கோப்பாயில் அமைக்கப்பட்ட கொரோனா மருத்துவமனையில் 18 பேர் சிகிச்சைக்குச் சேர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா மருத்துவமனைக்கு 18 கொரோனா நோயாளர்கள் சிகிச்சைக்காக நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர். 19 ▶

## நாட்டரிசி ரூ.92

### வெளியானது வர்த்தமானி

கொழும்பு, நவ. 5

அரிசிக்கான நிர்ணய விலையை நிர்ணயித்து நுகர்வோர் விவகார அமைச்சு வர்த்தமானி வெளியிட் 19 ▶

## கொரோனா 12,000+

### நேற்று 443 பேர்

கொழும்பு, நவ. 5

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்தைக் கடந்துள்ளது. 19 ▶

## தேசியப் பட்டியலில் பஸில் எம்.பியாகலாமா?

### கிளம்பியது புதிய சர்ச்சை

கொழும்பு, நவ. 5

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச் சருமான பஸில் 19 ▶

## உடுவில் சிறுவனுக்கு மருதங்கேணியில் சிகிச்சை

### சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 5

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்ட 9 வயதுச் சிறுவன் மருதங்கேணி கொரோனா சிகிச்சை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என வடக்கு மாகாண சுகாதார 20 ▶

# எதிர்வரும் இரு ஆண்டுகள் கொரோனாவுடனே வாழ்வு!

## சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ.5**
**இன்னும் இரண்டு வருடங்களாவது கொரோனாவுடன் வாழவேண்டிய நிலை எமக்கு ஏற்படும். அதனால் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்று வதற்கு நாம் பழகிக்கொள்ளவேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.**

அவர் தெரிவித்துள்ளதாவது:
இருதயநோய் உட்பட தொற்றா நோயாளர்கள் தமக்கு ஏதேனும் பாதிப்பு இருந்தால் மருத்துவம னைக்குச் செல்வதற்கு தயங்க வேண்டாம். அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு சுகாதார தரப்பினர் தயாராகவே இருக்கின்றனர். இவர் கள் எவ்வகையான நோயாளர்கள் என்பதனைக் கண்டறிவதற்கான சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளும் உள்ளன.
கொரோனா வைரஸ் தொற்றுக் கான அறிகுறிகள் இருந்தால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெ டுப்பதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படும். எனவே, நோய் உக்கிரமடையும்வரை இருக்காமல் மருத்துவமனைக்கு வருமாறு கேட் டுக்கொள்கின்றேன்.
மருத்துவமனைக்கு வருவதற்கு முன்னர் சுகாதார நடைமுறை களை முழுமையாகப் பின்பற் றுங்கள். முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி, கைகளை சுத் தப்படுத்தல் போன்றவற்றைக் கடைப்பிடித்து நோய் அறிகுறி களை வைத்தியர்களுக்குச் சொல் லுங்கள். எவராவது ஒருவர் மார டைப்பால் உயிரிழந்திருக்கும்பட்சத் தில் அவருக்கு உடற்கூற்றுப் பரி சோதனை மேற்கொண்ட பின்பு கொரோனாத் தொற்று இருந்தால் அவர் கொரோனாவால் உயிரிழந் தவர் என்றே கணிக்க வேண்டியுள் ளது. கொரோனா வைரஸுடன் இன்னும் இரண்டு வருடங்களாவது வாழவேண்டும். சுகாதார நடைமு றைகளை முழுமையாக பின்பற்றி பழகுவோம். அதேவேளை, பி.சி. ஆர். பரிசோதனைகள் வழமை போல் இடம்பெற்றுவருகின்றன. செயலிழந்த இயந்திரங்கள் தற் போது இயங்கும் நிலையில் உள் ளன.என்றார். (எ-44)

# வரவேண்டிய நேரத்தில் வருவார் பஸில்

### பஞ்ச் விடுகின்றார் ஜயந்த

கொழும்பு, நவ. 5
பசில் ராஜபக்ச உரிய நேரத்தில் மட்டுமே நாடாளுமன் றத்திற்குள் பிரவேசிப்பார் என நாடாளுமன்ற உறுப்பி னர் ஜயந்த கெட்டகொட தெரிவித்தார்.
எனினும் இது உடனடியாக நடக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஜயந்த இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:
பஷில் ராஜபக்ச பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவு நர். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டும் என்பதையும் தகுந்த நேரத்தில் அவர் பதவியேற்பதை யும் அனைவரும் விரும்புகின்றனர். எனினும் இது உடனடியாக நடக்காது. தேசிய பட்டியலில் நாடாளு மன்ற உறுப்பினராக பஸில் ராஜபக்ச நியமனம் செய் யப்படும்போது அதற்காக எனது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுக்க நான் தயார் என்றார். (ம-இ)

# இலங்கை முழுவதும் சிறு கொத்தணிகள்

கொழும்பு, நவ.5
இலங்கை முழுவதும் பல்வேறு பகுதிகளில் சிறு சிறு கொரோனாக் கொத்தணிகள் உருவாகியிருக் கலாம் என்று சுகாதார அமைச்சு அச்சம் வெளி யிட்டுள்ளது.
சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவர் ஜய ருவன் பண்டார இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை முழுவதும் சிறுசிறு கொரோனா கொத் தணிகள் உருவாகியிருக்கலாம். எனினும் இந்தக் கொத்தணிகள் தற்போதுவரை உத்தியோகபூர்வ மாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. எந்த நேரத்தி லும் அவை வெளிப்படலாம். பி.சி.ஆர் பரிசோத னைகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் என்பவற்றை மக்கள் மறந்துவிட்டுத் தற்போது செயற்படுகின்ற னர் என்றார். (ம-இ)



மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கை நாடுகளுக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பரிஸ் ஹதாத் செர்வோஸ் பிரதமர் மகிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

# இலங்கையருக்கு ஆஸ்திரேலியாவில் சிறைத் தண்டனை

கொழும்பு, நவ.5
சிறுவர் பாலியல் துஸ்பிர யோக குற்றச்சாட்டில், ஆஸ் திரேலியாவில் வசிக்கும் இலங்கையர் ஒருவருக்கு ஆறரை வருட சிறைத் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.
இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட அவர், கடந்த 2017 ஆம் ஆண்டு ஆஸ்திரே லியா பொலிஸாரால் பிரிஸ் பேனில் வைத்து கைதுசெய் யப்பட்டார்.
தொடர்ச்சியாக மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளில், அவர் சிறுவர் துஸ்பிரயோ கங் களில் ஈடுபட்டமை உறுதி செய் யப்பட்டது. (ஐ-இ)

### கொரோனா பெருந்தொற்றுக்குள்

# ஊடகர்களின் சேவையை மெச்சுகின்றார் ஹெகலிய

கொழும்பு, நவ. 5
கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஊடகவிய லாளர் நிறைவேற்றும் பொறுப்பு மேன்மைமிக்கது என அமைச் சர் ஹெகலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெரும்பாலான ஊடகவியலாளர் கள் தமது உயிர்களையும் துச்சமாக மதித்து செயற்பட்டு வருவதைக் காணமுடிகிறது.
பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாடு எதிர்கொள்ளும் இடர் நிலை மைகளில் ஊடகவியலாளர்கள் தமது தொழில்வாண்மையை கருத்திற்கொள்ளாமல் சிறப்புமிக்க தேசிய கடமையை நிறைவேற்று கின்றனர்.
ஊடகவியலாளர்கள் இந்தத் தொற்று நிலைமையைத் தோற்கடிப்பதற்காக மக்களுக்கு வழங்கிய அறிவும் விளக்கமும் தகவல்களும் மிகவும் பயனுள்ளவையாக உள்ளன.
பல ஊடக நிறுவனங்கள் ஒன்றி ணைந்து மக்களுக்கு தெளிவுபடுத் தியுள்ளன. பிராந்திய ஊடகவியலா ளர்களின் பொறுப்புக்களும் மிகவும் சிறப்புமிக்கவை. எதிர்காலத்தில் இதற்காக உரிய பாராட்டை வழங்கு வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ம-இ)

# மருத்துவபீடங்களுக்கு மேலும் 371 மாணவர்கள்

கொழும்பு, நவ.5
நாட்டில் ஏற்பட்டுள்ள மருத்துவர்களுக்கான பற் றாக்குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டு மருத் துவபீடங்களுக்கு இந்த ஆண்டு மேலதிகமாக 371 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர் என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுக்கவிதிகள் மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
மருத்துவ பீடங்களை அபிவிருத்தி செய்ய அரசாங் கம் தீர்மானித்துள்ளது. சப்ரகமுவ, ஊவா வெல் லச பல்கலைக்கழக மருத்துவபீடங்கள் அபிவி ருத்தி செய்யப்படவுள்ளன. இரத்தினபுரி, பதுளை, தியத்தலாவ உள்ளிட்ட மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்து அங்கு மாணவர்களுக்கு ஆய்வுகள், பரிசோதனைகள் மற்றும் சத்திர சிகிச் சைகளுக்கான வாய்ப்புகளை உருவாக்க எதிர் பார்க்கின்றோம். ஊவா வெல்லச பல்லைக்கழகத் தில் மருத்துவபீடம் இருந்தாலும் பதுளையிலிருந்து 165 மாணவர்கள் நாட்டின் ஏனைய பல்கலைக் கழக மருத்துவபீடங்களுக்கு தெரிவாகியுள்ளனர் எனத் தெரிவித்தார். (வ-இ)

# கொழும்பு கிராண்ட்பாஸில் 16 பேருக்கு கொரோனா!

கொழும்பு, நவ. 5
கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி வளாகத்தில் 16 பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் குறித்த பிர தேசத்தில் அமைந்துள்ள சுமார் 30 வீடுகள் சுகாதாரத் துறையினரால் அடையா ளப்ப டுத்தப்பட்டு தனிமைப்ப டுத்தப்பட்டன. அவர்கள் அனைவரும் தத்தம் வீடுகளி லேயே தனிமைப்படுத்தப்பட்ட னர். (ம-இ)

# மூன்று ஆண்டுகள் வரை கொத்தணிகள் கிளம்பும்

## தொற்று நோயியல் நிபுணர் அதிர்ச்சித் தகவல்



கொழும்பு, நவ.5

**இலங்கையில் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றுடன் தொடர்புடைய கொத்தணிகள் உருவாகும் அபாயம் உள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.**

தேசிய புத்திஜீவி கள் அமைப்பின் பொதுச் செயலாளரும் தொற்று நோயியல் நிபுணருமான வைத்தியர் நிஹால் அபேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இவ்வாறான அபாய நிலை உள்ளமையால் அது தொடர்பில் தொடர்ந்து மக்களுக்கு அறிவுறுத்துவது அவசியம்.

ஆரோக்கியமான ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும்போது, அவரது வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நபர்களுக்குத் தொற்று ஏற்படும் அபாய நிலை உள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலை குறித்து அனைவரும் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். என்றார். (எ-22)

# ஐந்து செய்தியாளர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி

கொழும்பு, நவ.5

20 ஆவது அரசமைப்புத் திருத்த நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்ட ஐந்து ஊடகவியலாளர்களுக்கு இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிங்கள மொழி பத்திரிகையைச் சேர்ந்த மூன்று ஊடகவியலாளர்களும், ஆங்கிலப் பத்திரிகையைச் சேர்ந்த ஒரு ஊடகவியலாளரும், ஒரு தமிழ் தொலைக்காட்சி ஊடகவியலாளரும் கொரோனாத் தொற்றுக்குள் ளாகியுள்ளனர். இதனை நாடாளுமன்றக் குழு உறுதிப்படுத்தியுள்ளது. (எ-இ)



# கொரோனா பெருந்தொற்று: மீன் விற்பனையில் வீழ்ச்சி

கொழும்பு, நவ. 5

இலங்கையில் பேலியகொட மீன் சந்தையில் கொரோனாப் பெருந்தொற்று கொத்தணியாக உருவெடுத்துள்ள நிலையில், வவுனியாவில் மீன் விற்பனை பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகர மீன் சந்தை, குருமன்காடு மீன் சந்தை, குழுமாட்டுச்சந்தி மீன் சந்தை போன்ற இடங்களில் மீன்கள் தேங்கிக் காணப்படுகின்றன. வியாபாரிகள் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-18)

# நிர்வாகத் தெரிவு

மன்னார், நவ. 5

மன்னார் மாவட்ட கமக்கார அதிகார சபையின் தலைவராக நானாட்டான் கமநல சேவை நிலையத்தின் தலைவர் ப.ஜெரோம் இருதய தாஸ் தெரிவுசெய்யப்பட்டார். மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அ.மரின்குமார் தலைமையில் உயிலங்குளம் கமநல சேவை நிலையத்தில் கடந்த வாரம் இந்தத் தெரிவு நடைபெற்றது. (ம-213)

# கடலில் மூழ்க வேண்டாம் கதிரையைக் கடாசுங்கள்

## சுகாதார அமைச்சருக்கு ஐக்கிய மக்கள் சக்தி சவால்

கொழும்பு, நவ.5

கடலில் மூழ்கி உயிர் துறப்பதைக் காட்டிலும் சுகாதார அமைச்சர் பதவி துறப்பது மேலானது. அதனால் கடலில் குதிக்க துணிந்த அவர், நாட்டுக்காக பதவி துறக்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் சவால் விடுத்துள்ளார்.

தான் கடலில் மூழ்கி இறந்தால் கொரோனா வைரஸ் ஒழியுமெனில் அதைச் செய்வதற்கும் தயாரென சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவிவருகின்றது. அதைக் கட்டுப்படுத்துவதில் சுகாதார அமைச்சு தோல்வி கண்டுள்ளது.

நிலைமை இப்படி இருக்கையில் நகைச்சுவைத்தனமான அறிவிப்புகளை சுகாதார அமைச்சர் விடுக்கின்றார். அவர் கடலில் மூழ்கவேண்டிய தேவையில்லை, பதவி விலகி சிறப்பாக செயற்படக்கூடிய ஒருவருக்கு அந்த பதவியை வழங்கினாலே அது பெரும் உதவியாக இருக்கும்.

கடலில் மூழ்குவதாக சுகாதார அமைச்சர் கூறிய பின்னர் , இலங்கை கடற்பரப்பில் திமிங்கிலங்கள் கரையொதுங்குவதை காணமுடிகின்றது. அவர் கடலில் மூழ்கவேண்டியதில்லை, நாடுமீது அக்கறை இருந்தால் பதவி துறக்க வேண்டும். அதனை அவர் செய்வாரா?'' - என்றார். (எ-44)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 201 பேர் கைது!

கொழும்பு, நவ.5

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 201 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள னர் என்றும், 31 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 4 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 2,193 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 338 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)



# மாணவர்களுக்கு பஸ் கையளிப்பு

மன்னார், நவ.5

மன்னார் மடு கல்வி வலய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி, வட மாகாண சபையின் பிரதம செயலாளர், வடக்கு மாகாண சபையின் பாவனையில் இருந்த பஸ் ஒன்றை வழங்கியுள்ளார்.

இந்த பஸ் மடு வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலனிடம் நேற்றுக் கையளிக்கப் பட்டது. (ஐ-60)

# வாள்களுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.5

கோண்டாவில் பகுதியில் நடந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நேற்று காலை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து இரு வாள்களும், கைக்குண்டும் மீட்கப்பட்டுள்ளன என்று கூறப்படு கின்றது.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும், விசாரணையின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

# மீனவர் குழு மோதல்; ஒருவர் சிகிச்சையில்

முல்லைத்தீவு கடலில் இரு பிரிவு மீனவர்களுக்கு இடையே நடந்த மோதலில் மீனவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொக்குளாய் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின மீனவர்களுக்கும், புல்மோட்டைப் பகுதி மீனவர்களுக்கும் இடையிலேயே மோதல் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த மோதலில் காயமடைந்த மீனவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மீன்பிடி தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கைகலப்பாக மாறியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-19)

# தனிமைப்படுத்தல் தொடர்பில் குவிகின்றன முறைப்பாடுகள்

## மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு


கொழும்பு, நவ.5

**தனிமைப்படுத்தலின்போது பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதுள்ள நிலையில் பொது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அவர்களின் சுதந்திரத்தையும் விரும்பிய இடங்களுக்குப் பயணிப்பதற்கான இடைவெளியையும் கட்டுப்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளமையை அங்கீகரிக்கின்றோம். எனினும் தனிமைப்படுத்தலின் போது பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. தனிமைப்படுத்தல் நடைமுறைகளை முறைமைப்படுத்தும் வழிகாட்டல்கள் எம்மால் சுகாதார அமைச்சுக்கும் கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான மத்திய நிலையத்துக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் ஆரம்பத்தில் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டாலும் தற்போது அவர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நாம் பெரிதும் வரவேற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# சிவனொளிபாத யாத்திரை வழமைபோன்று நடக்கும்!

கொழும்பு, நவ.5

சிவனொளிபாத மலையின் பருவகால யாத்திரை வழமை போன்று இடம்பெறும் என்று, பெல்மதுளை கல்பொத்தாவலை ஸ்ரீ ரஜமகா விகாரையின் விகாராதிபதியும், சிவனொளிபாத மலையின் தலைமை விகாராதிபதியுமான பெங்கமுவே தம்மதிஸ்ஸ தேரர் தெரிவித்தார். டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று, சிவனொளிபாத மலையின் பருவகால யாத்திரை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர் மேலும் தெரிவித்ததாவது,

திட்டமிட்டபடி பருவகால யாத்திரை, டிசெம்பர் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். இதை முன்னிட்டு, டிசெம்பர் 28 ஆம் திகதி, பெல்மதுளை கல்பொத்தாவலை ஸ்ரீ ரஜமகா விகாரையிலிருந்து சமன் தெய்வத்தின் திருவுருவச்சிலை, அதன் ஆடை, ஆபரணங்கள் என்பன வழமைபோன்று பொல்மதுளை அவிஸ்ஸாவளை, பெல்மதுளை - பலாங்கொடை, பெல்மதுளை - இரத்தினபுரி, பெல்மதுளை குருவிட்ட ஆகிய நான்கு வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். இதன் போது சுகாதாரத் துறையினரின் வழிகாட்டல்களும் முறையாகக் கடைப்பிடிக்கப்படும் -என்றார். (ற-இ)

# முட்டை விலை மீண்டும் வீழ்ச்சி


கொழும்பு, நவ.5

இலங்கையில் முட்டையின் விலையில் மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு மற்றும் கொரோனாப் பரவல் காரணமாக முட்டை யின் கொள்வனவு தற்போது குறைந்துள்ளது.

முட்டை விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விலையில் மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு காலத்தின் போது முட்டை 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# முல்லைத்தீவில் வெடிபொருள் மீட்பு



முல்லைத்தீவு, ஒக்.5

முல்லைத்தீவு, சிலாவத்தை, சுவாமிதோட்டத்தில் புதைக்கப்பட்டி ருந்த வெடிபொருள்கள் சில பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட் டுள்ளன.

இரு ஆர்.பி.ஜி. எறிகணைகள், 61 மில்லிமீற்றர் எறிகணை, கைக்குண்டு ஒன்று என்பனவே முல்லைத்தீவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சிறப்பு அதிரடிப்படையினரால் அழிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)

# கொரோனாவின் பிடியில் மாநகரசபை உறுப்பினர்

கொழும்பு, நவ.5

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வடகொழும்பைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் அவர் சிகிச்சைக்காக ஐ.டி.எச் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகிறது.

அந்த உறுப்பினர். கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்திலும் பங்கேற்றுள்ளார் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# ஆசிரியர்களுக்கு உள்ளூர் சேலைகள்

### *அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, நவ.5

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடையாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சேலைகளை வழங்குவது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, பௌத்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான 76 ஆயிரம் உள்ளூர் சேலைகளை விநியோகிப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது. இதற்காக 182.4 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

# கடமைகளைப் பொறுப்பேற்றார் புதிய விமானப் படைத்தளபதி



கொழும்பு, நவ.5

இலங்கையின் 18 ஆவது விமானப்படைத் தளபதியாக நியமிக்கப் பட்ட எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண நேற்று முன்தினம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். கொழும்பு விமானப் படைத் தலைமையகத்திலுள்ள தனது அலுவலகத்துக்கு வருகை தந்த அவர், சுபவேளையில் முதல் ஆவணத்தில் கையொப்பமிட்டு தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதன்போது அவருக்கு விஷேட மரியாதை அணி வகுப்பும் வழங்கப்பட்டது. (ற-இ)



# கடலுக்கடியில் பொலித்தீன்; சுத்தப்படுத்தியது கடற்படை

திருகோணமலை, நவ.5

கடலுக்கு அடியில் தேக்கமடைந்துள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் திட்டமொன்று திருகோணமலை கடல் பகுதியை மையமாகக் கொண்டு கடற்படையால்முன்னெடுக்கப்பட்டது.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளால் கடல் சுற்றுச்சூழல் மற்றும் அதன் பல்லுயிர் என்பனவற்றுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கு கடற்கரைகளைத் தூய்மைப்படுத்தும் பணிகளில் கடற்படை தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது. அதன்படி, கோணேஸ்வரம் முதல் திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனை வரையான கடற்கரைப் பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணி நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. (வ-ரி4)

# அதிரடிப்படை முகாம்களும் முடக்கப்பட்டன

கொழும்பு, நவ.5

விசேட அதிரடிப்படையினர் பலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து கொழும்பு மாவட்டத்தில் மூன்று விசேட அதிரடிப்படை முகாம்கள் முடக்கப்பட்டுள்ளன.

இதன்படி களுபோவில, இராஜகிரிய மற்றும் களனி ஆகிய பிரதேசங்களில் உள்ள அதிரடிப்படை முகாம்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 183 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. (வ-இ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முடிவும் சாட்டும்

ஒருபோதும் நாட்டை முடக்க முடியாது என்று ஜனாதிபதி கோத்தாபய சொல்லியிருக்கிறார். கொரோனா தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில், அவருக்கு விளக்கமளிக்கப்பட்டு, ஒட்டுமொத்த நாட்டையும் முடக்குவதே கொரோனாக் கொத்தணிகள் விரிவடையாமல் தடுக்க இப்போதைக்குள்ள ஒரேயொரு வழி என்று மருத்துவ அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கொரோனாச் செயலணித் தலைவரும், கோத்தாபயவின் தீவிர விசுவாசியுமான சவேந்திரசில்வா கூட, அதற்குப் பச்சைக் கொடி காட்டியுள்ளார். ஆனால் கோத்தாபயவோ " அப்படி நாட்டை முடக்கினால் ஏழைகள் உணவின்றிக் கஷ்டப்படும் நிலை வரும். எனவே முடக்க முடியாது'' என ஒரே போடாகப் போட்டுள்ளார்.

நாட்டுமக்கள் மீது ஜனாதிபதிக்கு இவ்வளவு கரிசனையா என்று நினைக்கும் போதே புல்லரிக்கின்றது. ஆனால் இதே ஜனாதிபதி தான் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு கொரோனா பரவத் தொடங்கிய போது, முன்னறிப்பு ஏதுமின்றி நாட்டை முழுதாக முடக்கியவர். கொரோனாவின் முதல் அலை எழுச்சி கொள்ளாதமைக்கு அந்த முழுமுடக்கமே பேருதவியாக இருந்தது. அதனால் தான் உலகில் வெற்றிகரமாக கொரோனாவைக் கட்டுப்படுத்திய நாடுகளில் ஒன்று என இலங்கையும் கொலரைத் தூக்கிவிட முடிந்தது. அப்போது நாடு முடக்கப்பட்டபோது மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளான போதும், பட்டினிச் சாவு ஒன்றுகூட பதிவாகவில்லை.

ஒருவேளை அந்த முடக்கத்தின் போது மக்கள் கொத்துக் கொத்தாக பட்டினியால் மடிந்திருந்தால், ஜனாதிபதி சொல்வதில் நியாயம் இருந்திருக்கும். ஆனால் சில மாதங்களுக்கு முன்னர் நாட்டைப் பூட்டிய போது, ஏழைகள் பட்டினியால் வாடுவார்கள் என்பது ஜனாதிபதிக்கு ஏன் உறைக்கவில்லை? ஏனெனில் அப்போது அவர் கொரோனாவை வைத்து அரசியல் செய்யவேண்டியிருந்தது. கொரோனா நிவாரணம் என்ற பெயரில் குடும்பமொன்றுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் கொடுத்து , அவர்களின் வாக்கு வங்கிகளைக் கவரவும், எதிரணியின் பிரசாரத்தை மட்டுப்படுத்தவும் ராஜபக்சக்களுக்கு பொது முடக்கம் தேவைப்பட்டது. இப்போதுதான் தேர்தலில் வென்று, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இருபதாம் திருத்தத்தையும் நிறைவேற்றியாகிவிட்டதே. இனி நாட்டை முடக்கினால் இப்போதைக்கு சொல்லிக்கொள்ளும்படியான அரசியல் லாபம் எதனையும் பெறமுடியாது. அதனாலேயே கொரோனாவின் மூன்றாம் அலை பல்வேறு கொத்தணிகளாக ஒட்டுமொத்த இலங்கையையும் பயமுறுத்தி, தினசரி கொரோனாச் சாவுகள் நிகழத் தொடங்கியுள்ள போதிலும், "சமூகத்தொற்றுமில்லை, நாட்டையும் முடக்க மாட்டோம்" என வீம்புக்கு நிற்கிறது அரசு.போதாக்குறைக்கு ஏழைகளின் பட்டினியைச் சாக்காகச் சொல்கிறது.

ஏழை, பணக்காரன் என்ற பேதமெல்லாம் கொரோனாவுக்குத் தெரியாது. எனவே அதற்கான தீர்வைத் தேடும்போது ஏழைகளின் பசியைப் போக்கும் வழிகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப முடக்கத்தை கொண்டுவரலாம். குறிப்பாக அரசு ஏழைகள் எனக் கருதும் குடும்பங்களுக்கு வாராவாரம் வீடுகளுக்கே பொருள்களை இலவசமாக விநியோகிக்கலாம். அப்படிச் செய்தால், முடக்கத்தைப் போட்டு கொரோனாவை ஒடுக்க முடிவதோடு, மக்கள் பட்டினிநிலைக்குப் போவதையும் தடுக்க முடியும். ஆனால் அப்படி உருப்படியான வேலை எதனையும் இந்த அரசு செய்யப்போவதில்லை. மாறாக மந்திரித்த தண்ணீர்ப்பானைகளை ஆற்றில் கரைக்க மட்டுமே இந்த அரசு லாயக்கு.

# இடர் நேரத்தில் கைகொடுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்கள்

*சிறப்பு வசதிகள் வழங்க ஆசிரியர் சங்கம் கோரிக்கை*

**கொழும்பு, நவ. 5**

**இலங்கையில் கொரோனா தொற்றுநோய் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உயர்தரப் பரீட்சை கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு சிறப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

மேல் மாகாணத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், பரீட்சை ஆணையாளர் அறிவித்ததுபோல் பொதுப் போக்குவரத்து சேவைகள் செயற்படவில்லை. பரீட்சைக் கடமைகளில் உள்ள அதிகாரிகள் தங்கள் சொந்த செலவில் போக்குவரத்து வசதிகளை செய்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊரடங்கு உத்தரவுப் பகுதிகளில் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு பயணக் கொடுப்பனவு வழங்குவது குறித்து பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். எனினும் பின்னர் அதனை குறுந்தகவல் ஊடாக திருத்தியுள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மாணவர்களுடன் அதிகாரிகள் இணைந்து பணியாற்றுவதால், அவர்களும் நோயால் பாதிக்கப்படுவதற்கான அபாயத்தில் உள்ளனர். அவர்கள் தனியார் மருத்துவமனைகளில் பணம் செலுத்தி பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது எனவும் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

தனிமைப்படுத்தப்பட்ட மாணவர்கள் மற்றும் கொரோனா நோய்த்தொற்று கண்டறியப்பட்ட மாணவர்களுடன் கடமையில் உள்ள அதிகாரிகளின் பி.சி.ஆர் சோதனைகளுக்கு செலவிட்ட பணத்தை மீளச் செலுத்துவது மற்றும் யாராவது ஒரு அதிகாரி பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொள்ள விரும்பினால் அதனை விரைவாக நடத்துவது குறித்து பரீட்சைகள் ஆணையாளர் தெளிவான திட்டமிடலை வெளியிட வேண்டும் எனவும், இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

(ஒ.இ)

## பஸிலுக்கு பச்சைகொடி காட்டுகின்றார் ராதா



பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதை நான் ஆட்சேபிக்கவில்லை. சிறப்பாக சேவையாற்றக்கூடிய அவர் சபைக்கு வந்தால் அனைவருக்கும் சேவைகளை வழங்குவார் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வருவதற்கான தடை 20 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக நீக்கப்பட்டுள்ளது. பஸிலுக்காகவே இந்த சரத்து உள்வாங்கப்பட்டது. பஸில் தேர்தலில் போட்டியிடவில்லை. தேசியப் பட்டியலிலும் இடம்பெறவில்லை. எனவே, அவர் நாடாளுமன்றம் வருவதற்கு சட்டரீதியாக பிரச்சினை உள்ளது என அறியமுடிகின்றது. அதனை நிவர்த்தி செய்துகொண்டு அவர் வரலாம். அவ்வாறு வந்தால் அதற்கு நாம் ஆட்சேபனை வெளியிடப்போவதில்லை- என்றார். (ஒ-இ)

*வர்த்தமானியில்*

## வீதிகளின் பெயர்களை பிரசுரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.5

இதுவரை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத சபைக்கு உரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பெயர்களை ஒரு மாத காலத்தினுள் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அனைத்து உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (ஐ-9)

## கழிவு நீரால் கொரோனா பரவுமா? சிறிநகர் கிராம மக்கள் அச்சம்

வவுனியா, நவ. 5

வவுனியா தேசிய கல்வியல் கல்லூரியில் இருந்து வெளியேறும் கழிவுநீரால் சிறிநகர் கிராமத்தில் வசிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கிறோம் என கவலை தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தேசிய கல்வியல் கல்லூரியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் எமது கிராமம் ஊடாக சென்றே வவுனியா குளத்தில் கலக்கின்றது. கழிவுநீர் வெளியேறுவதற்கு சீரான முறையில் வடிகான்கள் அமைக்கப்படாமையால் வீதியின் கரையில் தேங்கி நிற்கின்றது. துர்நாற்றம் வீசுவதுடன் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

அத்துடன் தேசிய கல்வியல் கல்லூரி கொவிட் -19 தனிமைப்படுத்தல் மையமாக தற்போது செயற்பட்டு வருகின்றது. அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள பலருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டும் வருகின்றது. அங்கிருந்து வெளியேறும் கழிவு நீரால் கிராமத்தில் வசிக்கும் மக்கள் மத்தியில் அச்சமான ஒரு நிலை காணப்படுகின்றது- என்றனர் (ஒ.இ)

வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 2020

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்" - அலெக்சான்டர் சிமித்

## ஊடகவியலாளர்களுக்கு வளாகத்தில் தொற்றில்லை

கொழும்பு, நவ.5
நாடாளுமன்ற ஊடகவியலாளர் இருவருக்கும் நாடாளுமன்ற வளாகத்தில் கொவிட் 19 வைரஸ் தொற்றுப் பரவவில்லை என நாடாளுமன்ற அதிகாரிகள் அறிவித்துள்ளனர் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சுகாதாரக் கட்டளைச் சட்டங்கள் மீதான வர்த்தமானி அறிவித்தல் தொடர்பிலான விவாதத்தின் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர் இருவருக்கும் நாடாளுமன்ற வளாகத்தில் கொரோனா வைரஸ் பரவியதாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு நாடாளுமன்றத்துக்கு வெளியில் கொரோனா பரவியதற்கான சாத்தியக்கூறுகளே உள்ளன என்று நாடாளுமன்ற அதிகாரிகள் அறிவித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# பொய்மையில் மக்களை அரசு மூழ்கடிக்கிறது!!

### குற்றஞ்சாட்டுகிறார் ஐ.ம.சக்தியின் எம்.பி

**கொழும்பு, நவ.5**
**உலகநாடுகளை வெற்றிகொள்ளும் வகையிலான ஆட்சியை உருவாக்குவதாக குறிப்பிட்டு ஆட்சிக்கு வந்த அரசு, மக்களை பொய்மையில் மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.**

கொரோனாப் பரவல் போன்ற விடயங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மக்களுக்கு தெரியாமல், நாட்டின் வளத்தை வெளி நாடுகளுக்கு விற்பனை செய்யும் சூழ்ச்சியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
உலக நாடுகளையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றை ஒழிப்பதற்காக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மந்திர நீர் அடங்கிய பானையை ஆற்றில் எறிகின்றார். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் மக்களை ஏமாற்றுவதே அரசாங்கத்தின் பிரதானமான நோக்கமாக இருக்கிறது.

கொரோனா நிதியத்துக்கு 10 மில்லியனுக்கும் அதிகமான நிதி கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் கூறப்படுகின்றது. அந்த நிதிக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் எந்த அறிவித்தலை விடுத்தாலும் அரசாங்கம் அதைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை. ஆனால் முஸ்லிம் ஜனாசாக்களை எரிக்கும் கொள்கையிலிருந்து மாத்திரம் எவ்வித மாற்றத்தையும் செய்யத் தயாராக இல்லை -என்றார். (ந-இ)

## தாயகம் திரும்பவுள்ள 150 இலங்கையர்கள்

கொழும்பு, நவ.5
சவூதி அரேபியாவில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள 150 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த இலங்கைப் பணியாளர்களை 48 மணி நேரத்தில் அழைத்து வருவதற்கான முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ந-இ)

## படையினர் மூவருக்கு கொரோனா

கொழும்பு, நவ.5
தலவாக்கலை, பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்ட மூன்று இராணுவ வீரர்களுக்கு கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தின் மின் மற்றும் பொறியியல் பிரிவில் கடமையாற்றும் இராணுவ வீரர்களுக்கே இவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளது என்று பி.சி.ஆர் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் பேலியகொட மீன் சந்தை கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்களாவர். (ந-இ)

## சிறை அதிகாரி தாக்கியே கைதி சாவு

கொழும்பு, நவ. 5
மொனராகல சிறைச்சாலையில் கைதி உயிரிழந்தமைக்குக் காரணம் சிறைச்சாலை அதிகாரிகள் தாக்கியமையால் தான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் கைதியொருவருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக கைதியொருவர் உயிரிழந்துள்ளார் என தென்னிலங்கை ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தன்னைத் திறந்துவிடும் நேரத்தைத் தாமதப்படுத்தியமைக்காக கைதியொருவர் சிறைச்சாலை அதிகாரியொருவரை கல்லால் தாக்கிய சம்பவத்தைத் தொடர்ந்து இரு சிறைச்சாலை அதிகாரிகள் கைதியை தாக்கிய தன் காரணமாக காயமடைந்த கைதி பின்னர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)

### மீன்சந்தைகளுக்கு பூட்டு

# கருவாடு உற்பத்திக்கு 6 லட்சம் கிலோ மீன்கள்

கொழும்பு, நவ.5
பேருவளை மீன்பிடி துறைமுகத் துக்கு கடந்த ஏழு நாள்களாகக் கொண்டுவரப்பட்ட 6 இலட்சம் கிலோகிராம் மீன்கள், நீர்கொழும்பு பிரதேச கருவாடு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன என மீன்பிடி துறைமுக கூட்டுதாபனத்தின் பதில் முகாமையாளர் ஜனக முதலிகே தெரிவித்துள்ளார்.



கடந்த மாதம் 27ஆம் திகதி தொடக்கம் கடந்த திங்கள் இரவு வரை,72 படகுகள் மூலம் 6 இலட்சம் கிலோகிராம் மீன்கள் கொண்டுவரப்பட்டன.

பேலியகொட மற்றும் ஏனைய மீன் சந்தைகள் மூடப்பட்டுள்ள தால், மீன்கள் கருவாடு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## குடிதண்ணீர் விநியோகம் வழமைக்கு

சாவகச்சேரி, நவ.5
தென்மராட்சி பிரதேசத்தில் சில கிராமங்களுக்கு நிறுத்தப்பட்டிருந்த குடிதண்ணீர் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இடர்கால முகாமைத்துவ அமைச்சின் அறிவுறுத்தல் பிரகாரம், ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை சில கிராமங்களுக்கு குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் அதிகாரசபை ஆகியவற்றினூடாக, பௌசர்கள் மற்றும் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது. எனினும் ஒக்ரோபர் 31 ஆம் திகதியுடன் விநியோகம் நிறுத்தப்பட்டது.

மக்களின் முறைப்பாட்டுக்கு அமைவாக, மறுஅறிவித்தல் வரை குடிதண்ணீரை விநியோகிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். அதற்கமைவாக குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. (க-இ)

# சுகாதாரப் பணிப்பாளர் நியமனத்தில் அரசு ஊழல்

### எம்.பி. லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.5
இலங்கையின் சுகாதாரப் பணிப்பாளர் நியமனத்தில் அரசு ஊழல் செய்துள்ளது என்றும், கொரோனா வைரஸ் சமூகப் பரவலாக மாறிவிட்டது என்ற உண்மையை அரசு மட்டுமே மறைத்து வருகின்றது என்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, கொரோனா வைரஸ் சமூகப் பரவலாக மாறிவிட்டது என்ற உண்மையை மறைத்து சுகாதார



அமைச்சர் சபைக்கு வந்த நேரம் தொடக்கம் கொவிட் 19 வைரஸ் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது என்றே கூறினார். சுகாதாரப் பணிப்பாளர் நியமன விடயத்தில் அரசு முன்னெடுத்த தெரிவும் தவறானதாகும். சுகாதார அமைச்சின் தனிப்பட்ட தெரிவாகவே இது அமைந்தது. எனவே இது அரசாங்கத்தின் தேவைக்காக ஊழல் செய்து இவ்வாறான தெரிவுகளை முன்னெடுத்துள்ளமை தெளிவாக வெளிப்படுகின்றது - என்றார். (ந-இ)

# 13 நாள்கள் சிசுவுக்கு கொரோனா



ஹப்புத்தளை, நவ.5
ஹப்புத்தளை கொஸ்லாந்தை பகுதியில் பிறந்து 13 நாள்களேயான குழந்தை உட்பட குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குழந்தையின் தாய், தந்தை, மற்றும் பாட்டி ஆகியோருக்கே கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இவர்கள் அண்மையில் கம்பஹாவில் இருந்து கொஸ்லாந்தை பகுதிக்குச் சென்றுள்ளனர். குழந்தையின் தாத்தாவுக்கு கொழும்பில் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அவர் பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடையவர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (ஐ-இ)

# உரத் தொழிற்சாலையால் சூழல் பாதிக்கப்படுகின்றது

## *மன்னார் பொது அமைப்புக்கள் முறைப்பாடு*

**மன்னார், நவ. 5**
**தலைமன்னார் – மன்னார் பிரதான வீதியிலுள்ள தொழிற்சாலையால் சூழல் மாசடைகின்றது எனவும் அந்தப் பகுதி ஊடாகப் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனவும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.**

இது தொடர்பில் பொது அமைப்புக்கள் இணைந்து எழுதியுள்ள மனுவில்,
மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் துள்ளுக்குடியிருப்பு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள உரம் தயாரிக்கும் தொழிற்சாலை சில வருடங்களாக இயங்கி வருகின்றது. தொழிற்சாலையால் சூழல் பிரச்சினைகள் நாளுக்கு நாள் ஏற்பட்டு வருகின்றது. இந்த வீதியால் பயணிக்கின்றவர்கள் மூச்சுத் திணறல் மற்றும் வாந்தி எடுக்கும் நிலைக்கும் உள்ளாகின்றனர்.

தொழிற்சாலையைச் சுற்றியுள்ள ஐந்து கிராமங்களிலுள்ள மக்கள் விரைவில் நோயாளிகளாக மாற்றம் அடைவதுடன் பிறக்கும் குழந்தைகள் பாதிப்புக்களுடன் பிறக்கும் அபாயம் காணப்படுகின்றது. தொழிற்சாலையிலிருந்து வாய்க்கால் ஊடாக வெளியேற்றப்படும் நீரால் நிலத்தடிநீர் மாசடைவதுடன் இவற்றை அருந்தும் கால்நடைகளும் இறக்கும் நிலையும் ஏற்பட்டு வருகின்றது.

இதனைக் கவனத்தில் எடுத்து உரிய தீர்வை அதிகாரிகள் பெற்றுத் தரவேண்டும் என்று பொது அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன. (ஒ,60)



# கொரோனா விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,நவ.5
கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்று யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம் நகர லியோ கழகம் மற்றும் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பொலிஸாரின் ஆதரவுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ் நகர லியோ கழகத்தின் தலைவர் லியோ ஜனுசன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாட்டில் லியோ கழக அங்கத்தவர்கள், யாழ்ப்பாணம் நகர லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவர்கள், பொலிஸார்,நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மதுசுதன் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர். (ஐ-இ)

# கொரோனாவிலிருந்து எம்மை பாதுகாப்போம்

## *மாவை அழைப்பு*

யாழ்ப்பாணம், நவ. 5
மக்கள் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைப் பேணுவதுடன் பெருமளவில் கூட்டமாயில்லாமல் முகக்கவசம் கட்டாயம் அணிந்து தமது அலுவல்களைப் பேணவும், அதன் மூலம் கொரோனாத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டுமெனவும் வற்புறுத்துவதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
போர் காரணமாக தமிழர் பிரதேசத்தில் போசக்கில்லாது குழந்தைகள் பிறக்கின்றன. யுனிசெவ் அமைப்பு இதனை சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவு காரணமாக கொரோனா தாக்கத்துக்கு எம்மவர்கள் அதிகளவில் உள்ளாகக்கூடும்.

மக்கள் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைப் பேணுவதுடன் பெருமளவில் கூட்டமாயில்லாமல் முகக்கவ சம் கட்டாயம் அணிந்து தம் அலுவல்களைப் பேணவும், அதன் மூலம் இந்நோய் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டுமெனவும் வற்புறுத்துகின்றோம்.

அத்துடன் பி.சி.ஆர் மருத்துவ பரிசோதனைகளை முதலில் பாடசாலை மாணவர்களிடமும், மக்களிடத்திலும் முழுமையாக நடத்த வேண்டும்.

பாதிப்புள்ளாகும் மக்கள், அரச ஊழியர்கள், ஏனைய தொழில்துறையினருக்கு அரசு போதிய உதவிகளையும், உணவு மருத்துவ வகைகளையும் வழங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.



அத்தோடு விவசாய உற்பத்திகள், கடல் வளத்துறையினர் செயற்பாடுகளில் மீன், கருவாடு மற்றும் ஏனைய துறையினர் உற்பத்திகளையும் சந்தைப்படுத்துவதற்கும், மக்கள் உணவுப் பண்டங்களைப் பாதுகாப்பாகப் பெறுவதற்கும் அரசுத் துறையினர் உதவ வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம், என்றுள்ளது. (ஒ,இ)

# வடக்கு பாடசாலைகளுக்கு தொலைக்காட்சி பெட்டிகள்

கொடிகாமம்,நவ.5
வட மாகாண பாடசாலைகளுக்கு "குருகெதர" நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

அவற்றுக்கான விவரங்கள் மற்றும் தரவுகள் ஈ.எம்.ஐ.எஸ் இணையத்தின் பௌதீகவள விவரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

எனவே வலயப் பாடசாலைகளின் பௌதீக வளங்களில் பகுதியில் காணப்படும் உபகரணங்கள் மற்றும் கணினி நிலையங்கள் ஆகிய பகுதிகளின் விவரங்களை ஈ.எம்.ஐ.எஸ் இணையத் தளத்தில் முழுமையாக இவற்றைப்படுத்துமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அனைத்து வலயக் கல்வி பணிப்பாளர்களையும் கோரியுள்ளார். (ஐ-159)

# திட்டமிட்ட வாழ்வாதார உதவிகளை வழங்குங்கள்

## *கல்லாறு கிராம மக்கள் கோரிக்கை*

கிளிநொச்சி, நவ.5
கல்லாறு கிராமத்தில் குடியேற்றப்பட்டதில் இருந்து இன்று வரை தமக்கு எந்தவிதமான திட்டமிட்ட வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்த கிராம மக்கள், அந்த வாழ்வாதார உதவிகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;
கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியைத் தொடர்ந்து சுண்டிக்குளம், கல்லாறுப் பகுதியில் 1/2ஏக்கர் அரச காணி ஒதுக்கப்பட்டு,147 குடும்பங்களுக்கு கண்டாவளை பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டது. தொடர்ந்து 100 குடும்பங்களுக்கு 2010ஆம் ஆண்டில் 1/4ஏக்கர் வீதம் காணி வழங்கப்பட்டது. மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. எனினும் இதுவரை எமக்கான திட்டமிடப்பட்ட வாழ்வாதார உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. மூன்றரை இலட்சம் ரூபா நிதி வீட்டைக் கட்டுவத்கு போதாததால் எமது வீடுகள் முழுமையாக் கட்டி முடிக்கப்படவில்லை.



வீட்டுத் திட்டத்துக்கு வழங்கப்பட்ட காணிகள் தவிர்ந்த மிகுதி இருக்கும் சுமார் 70 ஏக்கர் அரச காணிகளை விவசாயம் செய்வதற்காக வாது பகிர்ந்தளிக்குமாறு சம்மத்தப்பட்டவர்களிடம் கோரினோம். அவர்கள் சாதகமான பதிலை இதுவரை தரவில்லை. நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே எமக்குத் திட்டமிட்ட வாழ்வாதார உதவிகளை வழங்க அதிகாரிகள் முன்வரவேண்டும் - என்றனர். (ப-ரி1)

# அத்தியாவசியப் பொருள்கள் மன். சதொசவில் தட்டுப்பாடு

## *தனியார் கடைகளில் விலைகள் அதிகரிப்பு*

மன்னார், நவ.5
மன்னார் சதொசவில் அத்தியாவசிய உணவுப் பொருள்களான சீனி, அரிசி கோதுமை மா, வெங்காயம், கிழங்கு போன்றன இல்லை என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து, தனியார் கடைகளில் அவை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சதொச விற்பனை நிலையங்களில், அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருக்காது என்று அரசு தெரிவித்திருந்தபோதும் மன்னார் சதொசவில் அந்தப் பொருள்கள் இல்லை என்ற அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் உசாரான தனியார் கடைகள், அவற்றின் விலைகளை அதிகரித்துள்ளன.

மன்னாரில் கொரோனா நிலைமை மோசமடைந்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டால் அந்தப் பொருள்களின் விலைகள் இன்னும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன. எனவே மக்களுடைய பொருளாதார நிலையைக் கருத்தில்கொண்டு அரசு விரைவாக சதொசவுக்கு பொருள்களை வழங்கவேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டனர். (ப-213)

### தனிமையில் உள்ளவர்கள்

# 2 ஆவது பி.சி.ஆரின் பின்னரே சமூகத்தில் நடமாட முடியும்

## சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

சாவகச்சேரி. நவ.5

கொரோனாத் தொற்று காரணமாக தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளவர்கள் இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே சமூகத்தில் நடமாட முடியும். இவ்வாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி சரசாலை பகுதியைச் சேர்ந்த பெண் சட்டத்தரணியின் குடும்பத்தினருக்கு இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றில்லை என கண்டறியப்பட்டு நேற்று சான்றிதழ் வழங்கப்பட்டது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பெண் சட்டத்தரணியின் கணவரான பொறியியலாளர் வவுனியாவில் கடமையாற்றிய வேளையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனால் சாவகச்சேரி சரசாலையில் வதியும் பெண் சட்டத்தரணியின் குடும்பம். தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## ஒவ்வொரு மழை காலத்தையும் வேதனையுடனே கடக்கிறோம்

### வவுனியாவில் கொட்டில்களில் வாழும் மக்கள் கண்ணீர்



வவுனியா, நவ.5

மீள்குடியேறி கடந்த 10 ஆண்டுகளாக நிரந்தர வீடுகள் இன்றி, ஒவ்வொரு மழைக் காலங்களையும், மிகவும் வேதனையுடனேயே கடக்கிறோம் என்று வவுனியா தெற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிகக் கொட்டில்களில் வாழும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

மதர்பணிக்கன்குளம், மகிழங்குளம் பாலமோட்டை, குஞ்சுக்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு தெரிவித்தனர்.

"கடந்த போர்க்காலத்தில் இந்தக் கிராமங்களிலேயே முன்னணிக் காவலரண்கள் இருந்தன. இதனால் நாம் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். இப்போது மீள்குடியேறி 10 ஆண்டுகள் ஆகின்றன. தொடர்ந்தும் துன்பத்தையே அனுபவிக்கிறோம். மழைகாலங்களில் எமது குடிசைகளுக்குள் மழை நீர் நிற்கும். அந்த அளவுக்கு ஒழுக்கள் காணப்படுகின்றன. குழந்தைகள், நோய்வாய்ப்பட்டவர்கள் வீடுகளில் உள்ள போது அவர்களைப் பாதுகாப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறோம். இது தொடர்பில் மாவட்டச் செயலர், பிரதேச செயலர், கிராம அலுவலர்கள் போன்றோரின் கவனத்துக்கு பலமுறை கொண்டுசென்றுள்ளோம். அவர்களும் வீட்டுத்திட்டம் வருமெனக் கூறுகிறார்கள். அதை எதிர்பார்த்து ஒவ்வொரு மழைக் காலங்களையும் வேதனையுடனே கடக்கின்றோம்"என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ப- ரி)

## போதையில் சாரத்தியம்: 6 பேருக்கு தண்டம்

சாவகச்சேரி,நவ.5

மதுபோதையில் வாகனம் செலுத்திய 6 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ- 9)

## இறப்பு வீட்டில் அஞ்சலித்தவுடன் உடனடியாக வீடு திரும்புங்கள்

### சாவ. சுகாதார மருத்துவ அதிகாரி அறிவிப்பு

சாவகச்சேரி, நவ. 5

இறப்பு வீடுகளில் முக்கிய உறவினர்கள் தவிர்ந்த ஏனையோர் அஞ்சலி செலுத்திவிட்டு உடனேயே திரும்ப வேண்டுமென சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார் .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறப்பு வீடுகளில் அதிகளவானோர் தங்கியிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. மங்கள நிகழ்வுகளில் சுகாதாரப் பகுதியினர் சட்டங்களை மதித்து செயற்படுமாறு வலியுறுத்துவது போன்று இறப்பு வீடுகளில் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மக்கள் சிக்கல்களை எதிர்நோக்குவார்கள். மக்களாகவே உணர்ந்து செயற்பட வேண்டும். இல்லையேல் இறப்பு வீடுகளில் பங்குகொள்ள முடியாத நிலை ஏற்படலாம். தற்போதைய கொரோ னாத் தொற்றுக் காலத்தில் மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். இறப்பு வீட்டில் தங்கிநிற்காமல் அங்கு சென்று அஞ்சலி செலுத்திவிட்டு உடனேயே வீடுகளுக்குத் திரும்பவேண்டும் என்றார். (ஐ-9)

## கோபா குழு விபரம் சபையில் அறிவிப்பு

கொழும்பு, நவ.5

18 உறுப்பினர்கள் அடங்கிய அரச கணக்குக் குழு (கோபா குழு) விவரம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் சபையில் அறிவிக்கப்பட்டது.

அமைச்சர்களான பந்துல குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா, விதுர விக்ரமநாயக்க, சரத் வீரசேகர, டி.வி.சானக்க, நாலக்க கொடஹேவா, ஆகியோர் இந்தக் குழுவின் அங்கத்தவர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், விஜித ஹேரத், டிலான் பெரேரா, ஹர்ஷ டி சில்வா, சமிந்த விஜேசிறி, ஹேஷ விதானகே, இசுறு தொடங்கொட, அருப பெஸ்குவல், சஹன் பிரதீப், பேராசிரியர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரும் தெரிவுக்குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (சு-இ)



## சந்தை வியாபாரிகளின் பிரச்சினை ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 5

மருதனார்மடம் சந்தை வியாபாரிகளின் புதிய சந்தை கடைத் தொகுதி பங்கீட்டு பிரச்சினை தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்களான வி.மணி வண்ணன் மற்றும் வ.பார்த்தீபன், வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் லகிந்தன் ஆகியோர் வியாபாரிகளுடன் நேற்று கலந்துரையாடல் நடத்தினர்.

கடைத் தொகுதி பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பில் சந்தை வியாபாரிகள் கடந்த வாரம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-20)

## ஆஸ்திரேலியாவிலும் இலங்கையர் கைவரிசை

### வளைத்துப் பிடித்தது பொலிஸ்

கொழும்பு, நவ.5

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இலங்கைப் பிரஜைக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் முதல் ஒக்ரோபர் வரையிலான காலப்பகுதியில் ரோஸ்புட், ரேய், டூட்கரூக், போர்ட்சியா மற்றும் சோரெண்டோ பகுதிகளில் பல திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதை அடிப்படையாகக்கொண்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மவுண்ட் வேவர்லியில வசிக்கும் 24 வயதுடைய இலங்கைப் பிரஜையொருவின் வீட்டிலி



ருந்து 10 ஆயிரம் டொலருக்கும் அதிக பெறுமதியான திருடப்பட்ட பொருள்களுடன் 67 பைகள் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பாக குறித்த இலங்கைப் பிரஜைக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 2021 ஜூலை 20 ஆம் திகதி பிராங்ஸ்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

# பேலியகொட தொற்றுக்கு பணத்தாளே காரணமாம்!

**கொழும்பு, நவ.5**

**பேலியகொட மீன் சந்தையில் கொரோனா பரவலுக்குக் காரணம் பணத்தாள் பரிமாற்றம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**



பேலியகொட உப கொரோனா கொத்தணியில் 4 நாள்களுக்குள் 5 ஆயிரத்து 513 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட ஆய்வில் மீன் சந்தையில் B.1.42 என்ற வீரியம்மிக்க கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், வைரஸ் பரவலுக்கு பணத்தாள் பரிமாற்றமே முக்கிய காரணம் என்று அறியப்பட்டுள்ளது. பணத்தாள் மற்றும் மீன் விற்பனையாளர்களின் எச்சில் ஊடாக இந்த வைரஸ் பரவியுள்ளது என்று கூறப்படுகின்றது.

மினுவாங்கொட கொரோனா பரவல் கடந்த மாதம் 3 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின்னர் பேலியகொட கொரோனா பரவல் ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. (எ-இ)



## பெண் தலைமைக் குடும்ப தற்காலிக வீடு தீக்கிரை!

முல்லைத்தீவு, நவ.5

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் தற்காலிக வீடு நேற்று முன்தினம் இரவு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. 4 பிள்ளைகளுடன் கணவனை இழந்து வாழ்ந்துவரும் பெண்ணின் வீடே இவ்வாறு தீயில் எரிந்துள்ளது. வீட்டில் இருந்த உணவுப் பொருள்கள், ஆடைகள், கற்றல் உபகரங்கள், ஆவணங்கள், தையல் இயந்திரம் என்பன தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தப் பெண் கூலி வேலை செய்தே பிள்ளைகளை வளர்த்து வருகின்றார் என்றும், இவர்களுக்கு நிரந்தர வீடு கொடுக்கப்பட்டபோதும், அது இன்னமும் கட்டி முடிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இந்தத் தீ விபத்து தொடர்பாக கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்புக்கள் விவரங்களைத் திரட்டி வருகின்றன. இந்தக் குடும்பத்துக்கு முதல்கட்ட உதவியாக உணவுப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-19)

## தபால் சேவைகளில் தடங்கல்கள் இல்லை

யாழ்ப்பாணம், நவ.5

யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையிலான தபால் சேவைகள் எதுவித பாதிப்பும் இன்றி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தபால் ரயில் சேவை நிறுத்தப்பட்ட போதும் வட தென் பகுதிக்கான தபால் சேவைகள் வாகனம் மூலம் இடம்பெற்று வருகின்றன.

தெற்கே இருந்து அநுராதபுரத்துக்கு எடுத்து வரப்படும் தபால் பொதிகள் விசேட வாகனம் மூலம் வடக்கே எடுத்து வரப்படுவதாக யாழ்ப்பாண பிரதான தபாலகம் தெரிவித்துள்ளது.

வெளிமாவட்டங்களுக்கு இடையிலான தபால் சேவையில் எந்தவித பாதிப்பும், தடங்கலும் இன்றி வழமைபோல் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)



## யாழ். நகரில் மூடப்பட்ட கடைகள் மீளத்திறப்பு

யாழ்ப்பாணம், நவ.5

கொழும்பில் இருந்து வந்தவர்களுக்குக் கொரோனாத் தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நவீன சந்தைக் கட்டத் தொகுதியில் மூடப்பட்டிருந்த கடைகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்டன.

கொழும்பில் இருந்து வந்து கொரோனா தொற்றுடன் இனங்காணப்பட்டவரின் உறவினர்களது 4 கடைகள் சுகாதார வைத்திய அதிகாரியால் மூடப்பட்டிருந்தன. கடை உரிமையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு தொற்றுக் கண்ட றியப்படவில்லை. அதையடுத்து நேற்று காலை அனைத்துக் கடைகளும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. (எ-111)



## கொரோனாவை விரட்ட கிளிநொச்சியில் யாகம்!

கிளிநொச்சி, நவ.5

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து விடுபடுவதற்காக கிளிநொச்சியில் விசேட யாகம் நேற்று நடத்தப்பட்டுள்ளது. காலை 10 மணியளவில் கிளிநொச்சி பசுமைப்பூங்கா அருகில் உள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இந்த யாகம் நடத்தப்பட்டது.


கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகள், யாகங்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## தபாலகம் ஊடாக மருந்து

கொழும்பு, நவ.5

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில், அரச மருத்துவமனைகளில் இருந்து மருந்து விநியோகிக்கும் விசேட நடவடிக்கை தபால் திணைக்களம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் தபால் விநியோக நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படாது என்று பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)



## நோயாளர்களின் வீடுகளுக்கே மருந்துகள் இனி விநியோகம்

மட்டக்களப்பு, நவ. 5

கொரோனாப் பெருந்தொற்றைக் கருத்திற்கொண்டு, நோயாளர்களின் வீடுகளுக்கே மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது மட்டக்களப்பு போதனா மருத்துவமனை.


கிளினிக் நோயாளர்களின் மருந்துகளே இவ்வாறு வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இந்த சேவைக்காக திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை நோயாளர்கள் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், கிளினிக் இலக்கம், சிகிச்சை எளிக்கும் மருத்துவ நிபுணரது பெயர், நோயாளர்கள் வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு என்பனவற்றைத் தெளிவாகத் தெரிவித்து மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என மட்டக்களப்பு போதனா மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-இ)

## கண்டாவளையிலும் 18 பேர் தனிமையில்

கிளிநொச்சி, நவ 5

கண்டாவளையில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவருடன் தொடர்புபட்ட 18 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கொழும்பு மயூரா உணவகத்தில் பணிபுரிந்த கண்டாவளையைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதை அடுத்து அவருடன் தொடர்புடைய அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் என 18 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-113)



# இன்றைய நாள்

**மேடம்:** சகோதர, சகோதரிகளால் முன்பு ஏற்பட்ட கவலை நீங்கும். சில ருக்கு வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்பட்டு மறையும். எதிலும் கவனத்துடன் செயல்படுவது நல்லது.

**இடபம்:** பணியாளர்கள் சோர்வு அடைவர். பாராட்டு கிடைக்கும். செலவுகளை குறைக்கும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். வெளியில் தயாரித்த உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** வியாபாரத்தில் போராடித்தான் லாபம் ஈட்டுவீர்கள். சக பணியாளருக்கு விட்டு கொடுத்து பாராட்டு பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் கூடும்.

**கடகம்:** இளைஞர்களின் வெற்றி வாய்ப்பில் முன்னேற்றம் உண்டு. உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**சிம்மம்:** வியாபாரத்தில் புதிய துறைகளில் முதலீடு செய்வீர்கள். பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் உதவி செய்வர். மேலதிகாரியின் ஆலோசனை கிடைக்கும். தாயாருக்கு செலவு வரும்..

**கன்னி:** நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு நண்பர் கைகொடுப்பார். புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரலாம். வருமானம் கூடும். விலை உயர்ந்த பொருள்களை கவனமாக கையாளுங்கள்.

**துலாம்:** பழைய கடனைத் தீர்க்க புது வழியை யோசிப்பீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் நோக்கம் வெற்றி பெறும். எதிர்பார்த்த ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** திட்டம் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் உண்டு. யாரைப் பற்றியும் யாரிடமும் குறைவாக பேச வேண்டாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**தனுசு:** அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. உறவினர் உதவுவர். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் பாராட்டப் படுவீர்கள். பேச்சில் கவனம் தேவை. பிறரது ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**மகரம்:** நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பகையால் பிரிந்து சென்ற உறவினர்கள் விரும்பி வருவார்கள். வராது என்று நினைத்திருந்த பணம் கைக்கு வந்து சேரும்.

**கும்பம்:** எதிர்பாராத விருந்தினர் ஒருவரின் வருகை நன்மை தரும். மனதின் மாற்றங்களுக்கு ஏற்ப செயல்பாடுகளை மாற்றமாட்டீர்கள்.

**மீனம்:** பயணத்தின் போது எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். திருப்தியான சூழ்நிலை ஏற்படும். புதிய மாற்றம் தொடங்கும்.

# பவித்திரா வன்னியாராச்சி பதவியை உதறுங்கள்

## வேண்டுகோள் விடுக்கிறார் ஐ.தே.க.வின் பிரதித் தலைவர்

கொழும்பு, நவ.5

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி அவரது பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சரும், அரசும் கொரோனா வைரஸ் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிட்டனர் என்று அவர் மேலும் குற்றம்சாட்டியுள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது, தற்போது சுகாதார அமைச்சராக வுள்ள பவித்திரா வன்னியாராச்சி பதவியிலிருந்து விலக வேண்டும். அவருக்குப் பதிலாக சுகாதார விடயங்களில் நிபுணத்துவம்மிக்க ஒருவரை சுகாதார அமைச்சராக ஜனாதிபதியும் பிரதமரும் நியமிக்க வேண்டும். நாட்டு மக்களின் சுகாதாரத்தை உடல்நலத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒருவராக சுகாதார அமைச்சர் இருக்கவேண்டும். அந்தவகையில் ஒருவரை நியமிக்க வேண்டும் - என்றார். (ற-இ)

### கொரோனாத் தொற்று:

# இறந்தவர்களை அடக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவும்

## எம்.பி. ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, நவ.5

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களைப் புதைக்க அனுமதிப்பது தொடர்பில், அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடு தற்போது கொரோனா அனர்த்த நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளது. இறந்தவர்களை அடக்கம் செய்வது தொடர்பான பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி கத்தோலிக்க மக்களுக்கும் இது தொடர்பில் பிரச்சினையுள்ளது. இதிலுள்ள விஞ்ஞானபூர்வமான அடிப்படையை உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

அமைச்சர் அலி சப்ரி எடுத்து வரும் நடவடிக்கை தொடர்பிலும், பிரதமர் அதற்கு அளித்து வரும் ஒத்துழைப்பு குறித்தும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் அரசாங்கம் துரித நடவடிக்கையை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்என்றார். (ற-இ)

# புத்தளத்தில் முதலாவது தொற்றாளர் அடையாளம்

புத்தளம், நவ.5

புத்தளம் நகரில் முதலாவது கொரோனாத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

புத்தளம் நகரின் உடையார் வீதி வெட்டுக்குளம் பகுதியிலேயே இந்தக் கொரோனாத் தொற்றாளர் பி.சி.ஆர் பரிசோதனையின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று புத்தளம் பொதுச் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர் வெளிநாடு செல்வதற்காக பி.சி.ஆர். பரிசோதனை செய்தபோதே தொற்றுக்குள்ளாகியமை தெரிய வந்துள்ளது. இதையடுத்து இவரின் குடும்ப அங்கத்தவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)

# 'மாஸ்க்' அணியாதவர்களுக்கு எதிராக மன்னாரில் வழக்கு!

மன்னார், நவ. 5

மன்னாரில் மாஸ்க் அணியாமல் பயணிப்போருக்கு எதிராக மன்னார் பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

மன்னார் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் வழிநடத்தலில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.பி.ஜெயதுங்கவின் தலைமையில் மன்னார் நகருக்குள் மாஸ்க் அணியாமல் நடமாடுவோர் வாகனங்களில் பயணங்களை மேற்கொள்வோருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இன்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-213)

# மேல் மாகாணத்தில் ஊரடங்கு இறுக்கம்

கொழும்பு, நவ. 5

கொரோனா பெருந்தொற்று தீவிரமாகியுள்ள நிலையில், மேல் மாகாணத்தில் ஊரடங்கு மேலும் இறுக்கப்பட்டுள்ளது.

அத்தியவசியப் பொருள்களை வீடுகளுக்கே சென்று வழங்கும் நடைமுறை அங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி உரிய சமூக இடைவெளிகளைப் பேணிய வகையில் இந்த விற்பனைகள் இடம்பெறுகின்றன. அவ்வாறு சமூக இடைவெளியைப் பேணி வர்த்தகத்தில் ஈடுபட்ட முட்டை வியாபாரி ஒருவர் தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# ஊரடங்கு அனுமதிப்பத்திரம் வேறு நபர்களுக்கு விற்பனை

## பண்டாரகமவில் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 5

வாடகைக்கு வாகன சேவை வழங்கும் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த ஊரடங்கு கால அனுமதிப்பத்திரங்கள் மூன்றை வேறு நபருக்கு விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பண்டாரகம பிரதேசத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊரடங்கு கால அனுமதிப்பத்திரங்கள் மூன்றை 12 ஆயிரம் ரூபாவுக்கு அவர் விற்பனை செய்துள்ளார் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது. (ம-இ)

# கொரோனாத் தொற்றாளர்களில் 30 வீதமானோர் முதியவர்களே

## விசேட மருத்துவர் பாலித கருணாபேம தெரிவிப்பு

கொழும்பு, நவ.5
மேல் மாகாணத்தில் அண்மையில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 30 சதவீதமானோர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். இளைஞர்களுடன் ஒப்பிடும்போது உயிரிழக்கக்கூடிய எச்சரிக்கையும் இந்த வயதுடையோருக்கே அதிகமுள்ளது என்று விசேட மருத்துவர் பாலித கருணாபேம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுமார் 25 வயதுடைய இளைஞர்களுடன் 60 வயதுடையவர்களை ஒப்பிட்டு அவதானிக்கும்போது 60 வயதுடையோர் மரணிக்கக்கூடிய எச்சரிக்கை 30 சதவீதம் அதிகமாகக் காணப்படுகிறது. முதியவர்கள் எந்தளவு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது. அத்தோடு நாட்பட்ட தொற்றா நோயால் பாதிக்கப்பட்டுள்ள வர்களுக்கும் இந்த அவதான நிலைமை காணப்படுகிறது. அதிக குருதி அழுத்தம், இதய நோய் மற்றும் நீரிழிவு நோய் என்பவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் இதில் உள்ளடங்குவர். அண்மையில் மேல் மாகாணத்தில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 30 சதவீதமானோர் 60 வயதை விட அதிக வயதுடையவர்களாவர் என்றார். (ஐ-இ)


# கிழக்கில் இதுவரை 78 பேருக்கு தொற்று

## மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

திருமலை, நவ.5
கிழக்கு மாகாணத்தில் இதுவரை 78 கொரோனாத் தொற்றாளர் கண்டறியப்பட்டுள்ளதுடன் 2ஆயிரத்து 264 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் தொடர்ந்தும் தேவையற்ற விதத்தில் வீடுகளைவிட்டு வெளியேறாமல் சுகாதார வழிமுறைகளைப் பேணவேண்டும் என்று கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா 2 ஆவது அலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் 78 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தேவையற்ற விதத்தில் வீட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதுடன் கொரோனாத் தொற்றை தடுக்க எங்களுடன் இணைந்து செயற்படவேண்டும். அத்தோடு சுகாதார அமைச்சின் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அவதானமாகச் செயற்படவேண்டும் - என்றார். (ஐ-இ)



# உயர் தர மாணவன் மின்சாரம் தாக்கி சாவு

## காதலியைச் சந்திக்க சென்றபோது சம்பவம்?



கொழும்பு, நவ.5
க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியமாணவன், மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ஹதரலியத, பொல்வத்த பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மாணவியான காதலியைச் சந்திக்க வயலுக்குள்ளால் சென்றுகொண்டிருந்தபோது பன்றிக்கு வைத்த மின்சார பொறியில் சிக்கியே மாணவன் உயிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைத்தொலைபேசியில் பேசியபடி, தனது வீட்டிலிருந்து 500 மீற்றர் தொலைவிலுள்ள காதலியான சக மாணவியொருவரின் வீட்டை நோக்கி வயலுக்குள்ளால் சென்ற மாணவனை மின்சாரம் தாக்கியுள்ளது. காதலான மாணவனின் தொலைபேசியிலிருந்து எந்தச் சத்தமும் வராததையடுத்து, அவைனைத் தேடி காதலியான மாணவி வயல் வெளியூடாக வந்தபோது அவரும் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானார். எனினும், அவருக்கு கடுமையான பாதிப்புக்கள் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-இ)

# ஐ.நா.வுக்கான நிரந்தர பிரதிநிதியாகும் பீரிஸ்

கொழும்பு, நவ.5
நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக முன்னாள் தலைமை நீதியரசர்மொஹான்பீரிஸை நியமிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ் ஒப்புதலை நாடாளுமன்றின் உயர் பதவிகளுக்கான குழு நேற்று வழங்கியுள்ளது. வெளிநாட்டுச் சேவையினூடாக தொழில்சார் ரீதியில் இராஜதந்திரிகளாகப் பணியாற்றி வருபவர்களை 60 வயதுடன் ஓய்வுபெறுமாறு வெளிநாட்டு அமைச்சு வலியுறுத்திவரும்நிலையில், முன்னதாக ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றிவந்த ஷேனுகா செனவிரத்ன இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து குறித்த பதவிக்கு முன்னாள் தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையின் 44ஆவது தலைமை நீதியரசராக பணியாற்றியுள்ளதுடன் அதற்கு முன்பதாக முன்னாள் சட்டமா அதிபராகவும் அமைச்சரவையின் ஆலோசகராகவும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# நாடு முடங்காமல் இருக்க வழி கூறுகிறார் கரு ஜயசூரியா

கொழும்பு, நவ. 5
சுகாதாரத்துறை நிபுணர்களின் பரிந்துரைகளை கருத்தில் எடுப்பதன் ஊடாகவே நாடு தொடர்ச்சியாக முடக்கப்படுவதைத் தவிர்க்க முடியும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதில் சுகாதாரத்துறைசார் நிபுணர்களின் பரிந்துரைகள், குறிப்பாக எழுமாறாக மேற்கொள்ளும் பி.சி. ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் சுகாதார சேவையின் செயற்திறனை உயர்த்துதல் ஆகிய ஆலோசனைகள் தொடர்ச்சியாகக் கருத்தில் எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

மேலும் தற்போது பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய சுமார் 20 ஆயிரம் மாதிரிகள் நிலுவையில் இருப்பதாகவும் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் ர்களென்று சந்தேகிக்கப்படுபவர்கள் முச்சக்கரவண்டிகளில் தங்கியிருக்கும் நிலையேற்பட்டிருப்பதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளமை குறிப்பாகக் கவனத்திலெடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

நாட்டிலுள்ள சுகாதார சேவை வசதிகளின் ஊடாக கொரோனாத் தொற்றுக்குள்ளான நோயாளர்களைக் கையாள முடியுமென்றால் மாத்திரமே நாட்டில் முடக்கத்தை நீக்கி, வழமைபோன்று செயற்பட அனுமதிக்க முடியும்.

பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை மற்றும் செயற்திறனை அதிகரித்தல், தொற்றுக்குள்ளானவர்களை முறையாகத் தனிமைப்படுத்துதல் ஆகியவற்றின் ஊடாக மாத்திரமே இந்தத் தொடர்ச்சியான முடக்கத்தைத் தவிர்க்க முடியும், என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

# மன்னாரில் இறந்த முதியவருக்கு கொரோனா இல்லை



மன்னார், நவ.5
மேல் மாகாணத்திலிருந்து தலைமன்னாருக்கு வந்த நிலையில் உயிரிழந்த முதியவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த ஒக்ஸ்வல் சாள்ஸ் லியோண்டி ஸ்பேனிக் (வயது 75) என்ற முதியவர் கடந்த 2ஆம் திகதி நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியிலிருந்து தலைமன்னார் பியரிலுள்ள தனது மகளின் வீட்டுக்கு வந்துள்ளார். இவர் மேல் மாகாணத்திலிருந்து மன்னார் பகுதிக்கு வந்திருந்தமையால் கடந்த 23ஆம் திகதியிலிருந்து இரு வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் உயிரிழந்தார். இறப்பில் சந்தேகம் ஏற்பட்டதால், சடலம் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. பரிசோதனை முடிவில் அவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ப-60)

# எமது குடும்ப குலவிளக்கின்
# முதலாம் ஆண்டு நினைவு நாளும்
# ஏனைய எம் உறவுகளின் நினைவலைகளும்

### தம்பிராசா றொபேர்ட் செல்வநாயகம்

தோற்றம் 22 . 03 . 1913
மறைவு 05 . 11 . 1978

### செல்வநாயகம் லில்லி மகேஸ்வரி (முத்தையா மகேஸ்வரி)

தோற்றம் 13 . 03 . 1921
மறைவு 25 . 09 . 1963

### செல்வநாயகம் பத்மநாதன்
(யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்)



தோற்றம் 12 . 01 . 1947
மறைவு 18 . 12 . 1995

### பத்மநாதன் ஈஸ்வரி



தோற்றம் 17 . 01 . 1952
மறைவு 24 . 04 . 2015

### ஆதிநாராயணன் இந்திராதேவி
(சிற்றம்பலம் இந்திராதேவி, ஓய்வுநிலை ஆசிரியை புத்தளம்)



தோற்றம் 08 . 09 . 1951
மறைவு 13 . 06 . 2013

### பொன்னையா சங்கரப்பிள்ளை
(ஓய்வுநிலை அதிபர் உடுத்துறை ம.வி)




தோற்றம் 01.07.1938
மறைவு 11.08.2001

### திருமதி புஷ்பராணி சங்கரப்பிள்ளை
(செல்வநாயகம் புஷ்பராணி)
ஓய்வுநிலை ஆசிரியை உடுத்துறை ம.வி



தோற்றம் 22.08.1939
மறைவு 05.11.2019

### சங்கரப்பிள்ளை புஷ்பாகரன்
(அஞ்சல் அலுவலர் முள்ளியான்)



தோற்றம் 20 . 09 . 1969
மறைவு 20 . 01 . 2019

### சின்னர் கணபதிப்பிள்ளை




தோற்றம் 12 . 07 . 1914
மறைவு 21 . 04 . 2001

### கணபதிப்பிள்ளைநாகமுத்து



தோற்றம் 03 . 10 . 1920
மறைவு 05 . 01 . 1995

### கணபதிப்பிள்ளை சிற்றம்பலம்
(ஓய்வுநிலை மாவட்ட செயலக சாரதி, புத்தளம்)



தோற்றம் - - 1925
மறைவு 22 . 11 . 1999

### சிற்றம்பலம் கமலாசனி (முத்தையா கமலாசனி)



தோற்றம் 15 . 11 . 1929
மறைவு 31 . 07 . 2017

### ஜெயரூபன் சரோஜினிதேவி (சிற்றம்பலம் சரோஜினிதேவி)




தோற்றம் 31 . 12 . 1953
மறைவு 22 . 08 . 2019

குடும்பத்தினர்.

# பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது

## வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ. 5**

**வடமாகாணத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்று வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கொரோனா பெருந்தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையில் பொலிஸார் நேற்று ஈடுபட்டனர். இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது இலங்கையில் கொரோனாத் தொற்று அதிகளவில் பரவிவருகின்றது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை நான் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவியேற்ற பின்னர் கொரோனா ஒழிப்பு தொடர்பில் பொலிஸாரால் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பொது மக்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் மட்டுமே வெற்றி சாத்தியம் - என்றார். (ம-இ)

# அம்மாச்சிக்கு உயரதிகாரி களப் பயணம்

வவுனியா, நவ.5

நாட்டில் கொவிட்-19 தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் வவுனியாவில் உள்ள அம்மாச்சி உணவகத்தின் சுகாதார நிலைமை தொடர்பில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அருந்ததி வேல்சிவானந்தன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அங்கு மலசல கூடம், சமயலறை, களஞ்சிய அறை, விற்பனையிடம் என்பவற்றை பார்வையிட்டதுடன் உணவகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் சுகாதார நடைமுறை தொடர்பிலும் ஆராய்ந்திருந்தார்.

பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரின் இவ்வாறான திடீர் சோதனை நடவடிக்கையை பொதுமக்கள் பாராட்டினர். (ஜ-18)

# தாதியர்கள் 2பேருக்கு கொரோனாத் தொற்று




கொழும்பு, நவ. 5

கொழும்பு, தெற்கு போதனா மருத்துவமனையில் மேலும் இரு தாதியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனையின் ஏழாவது விடுதியில் பணிபுரியும் இரு தாதியர்களே கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை கொழும்பு தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த ஒருவரும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். (ஒ-இ)

# வீதிக்கு வந்த யானையால் புளியங்குளத்தில் பதற்றம்



வவுனியா, நவ.5

வவுனியா, புளியங்குளம் சந்தியில் இருந்து 600 மீற்றர் தூரத்தில் வீதிக்கு வந்த யானையால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் குறித்த யானை வீதிக்கு வந்ததுடன் சில மணிநேரம் அந்தப் பகுதியில் நடமாடியது.

இதனால் அவ் வீதி வழியாக போக்குவரத்து செய்த பயணிகள், வாகன சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அவ்வப்போது மாலை வேளைகளில் குறித்த வீதிக்கு யானை வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளதுடன், தற்போது மதிய வேளைகளிலும் வீதிக்கு வரத் தொடங்கியுள்ளது. வீதிக்கு வரும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த மின்சார வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பயணிகளும் அப்பகுதி மக்களும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஜ-18)

# முகக்கவசம் இன்றி நடமாடியவர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை



சாவகச்சேரி,நவ.5

சாவகச்சேரி பொலிஸார் நேற்று சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தையின் விற்பனைப் பிரிவுகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது முகக்கவசம் அணியாமல் மற்றும் முறையாக முகக்கவசம் அணியாமல் காணப்பட்டவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

அத்துடன் வாகனங்களில் முகக் கவசம் இன்றி வருவோரும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையில் பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி ஆர்.எஸ் ராஜபக்ஸ தலைமையில் பெருமளவு பொலிஸார் ஈடுபட்டனர். (ஜ-9)



# கசிப்புக் கோட்டையைத் தகர்க்க முன்வந்த கிளிநொச்சி மக்கள்

## அக்கராயனில் செவ்வாயன்றும் கசிப்பு உற்பத்தி முறியடிப்பு

கிளிநொச்சி, நவ.5

கிளிநொச்சி அக்கராயன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், பொலிஸாருக்கு தண்ணிகாட்டி கசிப்பு உற்பத்திகள் தாராளமாக இடம்பெறுகிறன என்று தெரிவித்து, அந்தச் செயற்பாடுகளை முறியடிக்க பிரதேச மக்களே முன்வந்துள்ளனர்.

சட்டவிரோத கும்பலின் கசிப்புக் கோட்டைக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த மக்கள் அங்கு 3 கொல்கலன்களில் இருந்த கோடாக்களைக் கண்டுபிடித்து பொலிஸாரின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி, வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், சோலை உள்ளிட்ட கிராமங்களில் கசிப்பு உற்பத்தி, விற்பனை தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. அவற்றை அடையாளம் கண்டு அதனை அழிப்பதற்கான பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானம் செலுத்தி பொலிஸாரின் உதவியுடன் அவற்றை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம் என்றனர்.

இதேபோன்று கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இளைஞர்கள் ஒன்றிணைந்து கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தியைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். கிளிநொச்சியில் உள்ள மக்கள் அண்மைக் காலமாகவே சட்டவிரோத செயற்பாடுகளை முறியடிக்க களமிறங்கியுள்ளனர். (ப-ரி)

# கடிதம் எழுதியது குற்றமா?

## ரிஷாத் எம்.பி கவலை



கொழும்பு, நவ.5

எந்தக் குற்றமும் செய்யாமல் என்னைக் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர். இடம்பெயர்ந்த மக்களை வாக்களிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், நிதியமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுக்கும் கடிதம் எழுதியது தவிர நான் எந்தத் தவறும் செய்யவில்லை என ரிஷாத் பதியுதீன் எம்.பி தெரிவித்தார்.

மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் நேற்று உரையாற்றியபோது மேலும் தெரிவித்த அவர்;

இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிக்க வசதி அளித்துக் கொடுத்ததற்காக எந்த ஒரு குற்றமும் செய்யாமல் என்னைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். 1990 இல் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களித்து வருகின்றனர்.

ஆனால் இந்த முறை அதனை பெரிதுபடுத்தி அதற்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த என்னைச் சிறையில் அடைத்துள்ளனர். நாட்டில் நீதி நியாயமிருந்தால் நான் விடுதலை செய்யப்படுவேன் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. எனக்கு நடந்த அநியாயத்தை படைத்த இறைவனிடம் ஒப்படைத்துள்ளேன் என்றார். (ப-இ)

*பாண்டியன்குளத்தில்*

# 10 மாணவர்கள் பல்கலைகளுக்கு

முல்லைத்தீவு, நவ.5

முல்லைத்தீவு பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்திலிருந்து, பத்து மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் தோற்றி, அண்மையில் வெளியான வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் கணிதப் பிரிவில் மூவரும், வர்த்தகப் பிரிவில் இருவரும், கலைப்பிரிவில் ஐவரும் இவ்வாறு பல்கலைக் கழகங்களுக்குத் [illegible]ள்ளனர் என்று [illegible]த்தினர் தெரிவித்தனர். (ப-ரி)

## வாடகைக்கு

யாழ் பஸ்தரிப்பிடத்திற்கு அண்மையில் இரு கடைகளும், யாழ் K.K.S. வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 2 வீடுகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777 232535

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பனம் சாராயம் மற்றும் போத்தலில் அடைக்கப்படும் கள் போன்றவற்றுக்கு அரசினால் அறவிடப்படும் வரியினைக் குறைக்க. நடவடிக்கை எடுத்த தென்னை, கித்துள் மற்றும் பனை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ அண்மையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் வடிசாலையைப் பார்வையிட வருகை தந்த போது மதிப்பளிக்கப்பட்டார்.

கொத்தணியின் தலைவர் க.துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பனை அபிவிருத்திச் சங்கத் தலைவர் கிரிசாந்தபத்திராச, யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## இரண்டாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



கடந்த 12.11.2018 திங்கட்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் செல்லையா நாகரத்தினம்

அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (05.11.2020) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

## சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

### திருமதி தெய்வநாயகி பரமேஸ்வரன்

(B.A. PGDE)



எமது வித்தியாலயத்தில் அளப்பெரிய சேவை ஆற்றி 34 வருட சேவையை நிறைவு செய்து அகவை அறுபதில் சேவையிலிருந்து ஓய்வு பெறும் எமது ஆசிரியை அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் புகழோடும் குடும்ப மகிழ்வோடும் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்
யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**பேருந்து, வான், சிறியவகை காவுவண்டி, (Mini Truck) போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல்**

1. தவிசாளர், கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களால் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (on call/ hiring) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக தகுதிவாய்ந்த கம்பனிகள் அல்லது தனி நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் |
|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 14-16 | 04 |
| 1.2 | பிரயாணிகள் வான், /Passenger Van | 08-10 | 03 |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 05 |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck | 02 | 02 |

2. விண்ணப்பிக்க தகுதியுடைய கம்பனிகள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை நவம்பர் 25ம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
3. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்திறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
4. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகமைகளை கொண்டிருத்தல் அவசியமானது

- பதிவு செய்யப்பட்ட கம்பனியாக அல்லது இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
- தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப் பட்டு இருத்தல் வேண்டும்.
- குறைந்தது 03 வருடங்கள் வாடகைவாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
- வருடாந்த வருமானம் கடந்த மூன்று வருடங்களில் குறைந்தது ரூபாய். ஒரு மில்லியனாக (Rs. 1000, 000) (Rs. One Million) இருத்தல் வேண்டும்.
- ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

5. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் வணிகத் தேவைகளை உள்ளடக்கிய தாக இருத்தல் வேண்டும் அவற்றிற்கான உரிய சான்று ஆவணங்களை விண்ணப்பத்தில் இணைத்தலும் வேண்டும்.
6. முழுமையான கேள்விப் பத்திரத்தை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு சேவைக் கட்டண வைப்புப்பணமாக ரூபா 2000.00 இனை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு வைப்புச்செய்தல் வேண்டும். அல்லது பல்கலைக் கழக காசாளரிடம் கருமபீடத்தில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பிரதிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் மூலப்பிரதியையும் (original) மற்றும் பாதுகாப்பு சேவைக்கட்டணத்தைச் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். பாதுகாப்புச் சேவைக்கட்டண வைப்புப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத கேள்வி விண்ணப்பங்களும் மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் மூலப்பிரதி (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வகைக்குரிய வாகனங்களின் வகை தனித்தனியே "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல்" எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, யாழப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடம் 25.11. 2020ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது தவிசாளர், கேள்விச்சபை, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 25.11.2020ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.
8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப்பணமாக ரூபா 15000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 25.03.2021ம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புவைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனைக் குறித்துக்கொள்ளவும்.

**மேலதிக தகவல்களுக்கு: பிரதிப்பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை – Tele: 021 2226517, Fax:- 021 2226517.**

தவிசாளர்
கேள்விச்சபை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கேள்வி அறிவித்தல்

யாழ் ஒளி மின்நிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.
சேவைகளுக்கான கேள்வி கோரல்

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் போக்குவரத்துக்காக (சுன்னாகத்தில் இருந்து கொழும்பு, கொழும்பு இருந்து சுன்னாகம்) ஆகக் குறைந்த 26 ஆசனங்களைக் கொண்ட பயணிகள் வாகனம் (பஸ்) ஒன்று 01 வருட ஒப்பந்த அடிப்படையில் தேவைப்படுகின்றது. இது சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரங்களை அலுவலக நேரத்தில் 01/12/2020 பி.ப 2.00 மணி வரை பின்வரும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான பொறியியலாளர்,
யாழ் ஒளி மின்நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
தொ .பே.இல. 021 224 2247 / 8

Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897

கேள்விப்பத்திர பெறுமதி. - ரூபா. 3,000.00
கேள்விப்பத்திர பிணை வைப்பு. - ரூபா. 30,000.00

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை
Office of the Deputy General Manager,
Ceylon Electricity Board,
Generation Head Quarters,
New Kelani Bridge Road,
Kolonnawa.
Telephone No.0112 423 897
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 02/12/2020 பி.ப 2.00 மணிக்கு Office of the Deputy General Manager, Ceylon Electricity Board, Generation Head Quarters, New Kelani Bridge Road, Kolonnawa. என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் திறக்கப்படும்.

## தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பம் கோரல்

## Royal Flour Mills (Pvt) Ltd.

**கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

Royal Flour Mills (Pvt) Ltd நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடத்திற்கான தகைமை வாய்ந்தவரிடம் இருந்து விண்ணப்பம் கோரல்.

**01. பதவி:**
தொழிற்சாலை ஊழியர்கள்
**கல்வித் தகைமை:**
க.பொ.த (சா/த) சித்தி

**02. பதவி:**
உற்பத்தி மேற்பார்வையாளர்
**கல்வித் தகைமை:**
க.பொ.த (சா/த). (உ/த) சித்தி
**முன்அனுபவம்:**
உற்பத்தி, தரப்படுத்தலில் முன் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

மேற்படி தகைமை உடைய 18-45 வயதுடைய ஆண்கள் தங்களின் சுயவிவரக் கோவை, கல்வி மற்றும் தொழில் துறை அனுபவ சான்றிதழ்களுடன் இம்மாதம் 6ம், 7ம், 9ம் திகதி காலை 9-1 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு கீழ்வரும் விலாசத்திற்கு சமுகமளிக்கவும்.

**விலாசம் :**
Royal Flour Mills (Pvt) Ltd
கைத்தொழில் பேட்டை
அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 076 336 6603

# கொரோனாவிலிருந்து விடுபட அனைவரும் பிரார்த்திப்போம்

## அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.5

இன மத பேதமின்றி உலக மக்கள் யாவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுவதுடன், கடவுளையும் பிரார்த்திக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்து மாமன்றம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலையின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இந்த பெரும் தொற்றிலிருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். உரிய சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்களையும் அநாவசியமான நடமாட்டங்ளையும் தவிர்த்தல் என்பன அவசியமாகிறது. தற்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தால் நாட்டிலுள்ள மக்களின் இயல்பு வாழ்க்கையும் நாளாந்த நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க அளவு முடங்கியுள்ளன. இன மத பேதமின்றி உலக மக்கள் யாவரும் இந்தப் பெரும் தொற்றிலிருந்து விடுபட சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்று வதுடன், கடவுளையும் பிரார்த்திக்க வேண்டும்.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நமக்காகவும் உலக மக்கள் அனைவருக்காகவும் வீடுகளிலும் ஆலயங்களிலும் பிரார்த்தனை செய்ய வேண்டும்- என்றுள்ளது. (ஐ-இ)

## அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் மூன்றாவது முறையாகவும் தமிழர்

கொழும்பு, நவ. 5

மூன்றாவது முறையாகவும் அமெரிக்க பிரதிநிதிகள் சபைக்கு ராஜா கிருஷ்ணமூர்த்தி எனும் தமிழர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ராஜா கிருஷ்ணமூர்த்தி அமெரிக்க பிரதிநிதிகள் சபைக்கு மூன்றாவது முறையாக தேர்வாகியுள்ளார். தன்னை எதிர்த்து போட்டியிட்ட பிரஸ்டன் நெல்சன் என்பவரை அவர் தோற்கடித்துள்ளார். மொத்தமாக பதிவான வாக்குகளில் ராஜா 71 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார் என்கின்றன அந்நாட்டு ஊடகங்கள். (ம-இ)

## கொரோனா நோயாளிகளுக்கு 49 மருத்துவமனைகளில் சிகிச்சை

கொழும்பு, நவ. 5

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இது வரை 49 மருத்துவமனைகளில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், கொரோனா நோயாளர்களுக்காக ஆயிரத்து 100 கட்டில்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ.இ)

## விமானப்படை தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு,நவ.5

புதிய விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரண நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராபக்சவை சந்தித்தார்.

சுதர்ஷன பதிரண இலங்கை விமானப் படையின் 18 ஆவது விமானப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 1990 ஆம் ஆண்டு சுபர் சோனிக் எப்.7 மற்றும் 1995ஆம் ஆண்டு கபீர் விமானங்களை இலங்கைக்குக் கொண்டுவந்த விமான ஓட்டியாகவும், கபீர் ஜெட் படையணியின் கட்டளைத் தளபதியாகவும் செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)


## 2021 ஆம் ஆண்டிற்கான மீன் சந்தை/இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்

## மாந்தை மேற்கு பிரதேசசபை

மாந்தை மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகளை 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர் / செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார்.** என்னும் முகவரியில் (தொலைபேசி இல 023-2051852//023-2051853/023-2051854) கட்டணங்களை செலுத்தி கேள்வி பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

2021 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர) | அனுமதிக்கப்பட்ட கொல்களம் | 1kg இறைச்சியின் அங்கீகரிக்கப்பட்ட உச்ச விலை |
|---|---|---|---|---|---|---|
| அடம்பன் உப அலுவலகம் | | | | | | |
| 01 | காத்தாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 317,100.00 | | |
| 02 | அடம்பன் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 396,600.00 | | தனி இறைச்சி -750.00 முள்ளுடன் - 700.00 ஈரல், - 900.00 |
| 03 | வட்டக்கண்டல் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 192,200.00 | புளியங் குளம் | |
| 04 | ஆண்டாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 296,500.00 | | |
| 05 | அடம்பன் மீன் சந்தை | 1,000.00 | 10,000.00 | 49,100.00 | | |
| விடத்தல்தீவு உப அலுவலகம் | | | | | | |
| 06 | விடத்தல்தீவு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 217,500.00 | பெரியமடு | தனி இறைச்சி -750.00 முள்ளுடன் - 700.00 ஈரல் - 900.00 |
| 07 | பெரியமடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 188,000.00 | | |
| இலுப்பைக்கடவை உப அலுவலகம் | | | | | | |
| 08 | இலுப்பைக்கடவை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 87,000.00 | மூன்றாம் பிட்டி | தனி இறைச்சி -750.00 முள்ளுடன் - 700.00 ஈரல் - 900.00 |
| 09 | மூன்றாம்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 148,000.00 | | |
| மடு உப அலுவலகம் | | | | | | |
| 10 | பெரிய பண்டிவிரிச்சான் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 435,000.00 | பெரிய பண்டி விரிச்சான; | தனி இறைச்சி -750.00 முள்ளுடன் - 700.00 ஈரல் - 900.00 |
| 11 | காக்கையன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 244,600.00 | காக்கையன் குளம் | தனி இறைச்சி -750.00 முள்ளுடன் - 700.00 ஈரல் - 900.00 |

01. கேள்வி பத்திரம் வழங்கும் காலம் - 06.11.2020 மு.ப 9.00 – 04.12.2020 மு.ப 11.00 மணிவரை.
02. கேள்வி பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி - 04.12.2020 பி.ப 2.00 மணிவரை.
03. கேள்வி பத்திரம் திறக்கப்படல் - 04.12.2020 பி.ப 2.00 மணிக்கு.
04. **04.12.2020 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.**
05. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியினை **தவிசாளர் / செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார்** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். பிரதியினை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார்** என்ற முகவரிக்கும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
06. **மன்னார் மாவட்ட எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் அவரது வதிவிடத்தை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் மூலம் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை உரியவர் நேரடியாக சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்பட பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.**
07. கேள்வி படிவத்தினை பெறுபவர் உள்ளூராட்சி மன்றத்தினால் தவறுனராக கணிக்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எந்தவித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்த தவறியவர்களாக இருந்தால் கேள்வியில் சித்திபெற்றிருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.
08. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. அதிகூடிய கேள்வித் தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அதிகூடிய தொகையை சமர்ப்பித்தவர் குத்தகையை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்வி தாரரின் கேள்வித்தொகை திருப்திப்படகூடியதாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
10. சபையால் குத்தகைக்கு வழங்கப்படும் இறைச்சிக்கடைகளில் இருந்து 1/2KM சுற்று வட்டத்திற்குள் குறித்த இறைச்சிவகை, விற்பனை செய்தல் ஆகாது.
11. இறைச்சிக்கடைகள் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும் அதனை சித்திகர கேள்விதாரர் பார்வையிட்ட பின்னர் திருப்திகொண்டே ஒப்பந்தம் செய்ததாக கருத்திற்கொள்ளப்படும்.
12. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் **1/3 பகுதியை 09.12.2020 ஆம் திகதி பி.ப 2 (இரண்டு) மணிக்கு** முன்னர் செலுத்தி சபையில் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்படும்.
13. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு
14. வருடத்தின் வழமையான போயாதினங்கள் மற்றும் வெசாக்,பொசன் தினங்களில் இறைச்சிக்கடைகள் மூடப்படும் போது குத்தகை கழிவு அனுமதி வழங்கப்படமாட்டாது.
15. இறைச்சிக் கடைகள் எவ்வித முன்னறிவித்தலும் இல்லாமல் தொடர்ந்தும் மூடிக் காணப்பட்டால் அந்நாட்களுக்குரிய தண்டப் பணம் அறவிடப்படும்.
16. கேள்வி சம்மந்தமான மேலதிக விபரங்களை மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**மாந்தை மேற்கு பிரதேசசபை,**
**அடம்பன்.**

05.11.2020

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
24 . 04 . 1947



மறைவு
06 . 10 . 2020

கடந்த (06.10.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்ப விளக்கு

## அமரர் தம்பிஜயா கந்தசாமி

(இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ACCD),
அற்புத நர்த்தன விநாயகர் ஆலய தலைவர்)

அவர்களின் மரணச் செய்தியறிந்து ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டோர்களுக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு உறவினர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.11.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் (அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் சிறுவர் பாடசாலைக்கு அருகாமை) கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சரவணமுத்து லேன்,
இருபாலை வீதி, கோண்டாவில்
கிழக்கு, கோண்டாவில்

க.தவஅருட்கரசி(மனைவி)
சகோதரர்கள், மருமக்கள்.

# 1ம் ஆண்டு, 19ம் நாள் நினைவஞ்சலி





**அமரர் செல்வி இராஜரட்ணம் தில்லைநாயகி**
தோற்றம் : 1939.08.06
மறைவு : 2019.11.05

**அமரர் இராஜரட்ணம் தயாநிதி**
தோற்றம் : 1947.10.12
மறைவு : 2020.10.18

"இராஜசக்தி" எனும் ஒரு கொடியில் பூத்த, மலர்களாய்
நாம் பரணி எங்கும் பரவி நறுமணம் வீசினோமே
சற்றேனும் நம் வதனம் வாடும் போதெல்லாம்
உங்கள் உடலும் உள்ளமும் துன்புற்றுக் கலங்கியதே
ஆனால் காலமும், காலனும் எவரையும் விடுவதுமில்லையே
எவருக்கும் காத்திருப்பதுமில்லையே....
எமது கொடியின் இருமலர்களையும் ஓராண்டுக்குள்
பறித்து ஊழி தாண்டவம் செய்ததே... ஐயகோ!

அன்று முதல் இன்றுவரை உங்கள் முகம் வாடியதில்லையே...
உங்களுடன் பேசியவர்களின் முகங்களும், உள்ளமும்
என்றும் துன்முகம் கண்டதில்லையே!
ஆனால் திரை மூடி வைத்த உங்கள் முகத்தை
கூடி நாங்கள் கொண்டு செல்கையில் நீங் கள் எமைக் கண்டும்
ஏனோ கண்திறந்து எமைப் பார்க்க வில்லையே!
மீளாத் துயில் கொண்டு எமை ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீர்களே!
கலையாத உங்கள் நினைவுகளுடன், உதிரும் கண்ணீர் பூக்களை
அர்ச்சித்து உங்கள் ஆன்மாக்கள் சாந்தியடைய
எங்கள் கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.


இறந்தாலும் இறக்காது உங்கள் நினைவுகள்
மறந்தாலும் மறக்காது எங்கள் சகோதர உறவுகள்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

"இராஜசக்தி", வண்வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 02 . 1989



மறைவு
04 . 11 . 2020

## சேதுகாவலர் ரகுநந்தனன்

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சேதுகாவலர் ரகுநந்தனன் நேற்று (04.11.2020) கண்டியில் காலமானார்.

அன்னார் சேதுகாவலர் ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ரகுநந்தினி, நந்தகோபி ஆகியோரின் சகோதரனும், கிருஷ்ண ராசாவின் மச்சானும், அஞ்சனாவின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2020) வியாழக்கிழமை கண்டி பலகொல்லை இல்லத்திலிருந்து முற்பகல் 11.55 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 1 மணியளவில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 114 4102,
077 988 5056.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி வைகுந்தம் காமாட்சி

(ஓய்வுநிலை ஆசிரியர்)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வைகுந்தம் காமாட்சி அவர்கள் நேற்று ( 04.11.2020) புதன்கிழமை நண்பகல் அளவில் இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா காசிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து கைலாயபிள்ளை, சிவசம்பு ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வைகுந்தம் அவர்களின் அன்பு மனைவியும், புனிதமலர் (ஓய்வுநிலை ஆசிரியை), குணதிசன் (ஜேர்மனி), நிர்மலா, வனஜமாலா (ஜேர்மனி), சிறீசந்திரகாந்தன் (கனடா), சசிகலா (ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயும், லோகநாதன் (ஓய்வுநிலை உப அதிபர்), மெஸ்ரல் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (ஓய்வு நிலை உப அதிபர்) உபேந்திரன் (ஜேர்மனி), சிவகாமினி (கனடா), காலஞ்சென்ற இரவிராஜ் ஆகியோரின் மாமியாரும், தினேஸ்குமார்-கபாலினி, பவதினி, ஜீடிட், சிம்யோன், விஷ்ணி, யதுஸ், பிரவீனா, உதிஷ்ரன் ஆகியோரின் பேர்த்தியும், டேசாயினியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2020) வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ்நிலைய வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 987 1354

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
04.04.1935



இறைவன் திருவடியில்
04.11.2020

## அமரர் தெய்வானைப்பிள்ளை சின்னக்குட்டி

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வரணி மாசேரியை வதிவிடமாகவும் கொண்ட தெய்வானைப்பிள்ளை சின்னக்குட்டி அவர்கள் நேற்று (04.11.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசி வள்ளிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சின்னையா, சிவகாமி, வள்ளியம்மை, காங்கேசு, இலட்சுமி மற்றும் திருமதி. வீ.சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சின்னக்குட்டியின் பாசமுள்ள மனைவியும், செல்வரத்தினம், திருமதி. க. இராஜேஸ்வரி, கணேசரத்தினம் (சுவிஸ்), திருமதி. ர.இரத்தினேஸ்வரி (சுவிஸ்), திருமதி. இ.யோகேஸ்வரி (நெதர்லாந்து) காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி செ.தவம், திருமதி. க. சிவக்கொழுந்து, கணேசமூர்த்தி, இரவீந்திரராசா, இராமதாஸ் ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும், தவலங்கேஸ்வரி, ஸ்ரீகிருஷ்ணன், சரத்பாபு, கௌதமி ஆகியோரின் அப்பம்மாவும், பிரதாப், பிரசாந், பிரகாஷ், பிரகாசினி, ருக்ஷன், ருக்ஷனா, பிரியா, பிரசாத் ஆகியோரின் அம்மம்மாவும், அட்சயன் அபிஷன், அனஞ்ஜா, அக்சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2020) வியாழக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கப்பத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாசேரி, வரணி.**

**வெளிநாட்டு தொடர்புகளுக்கு:**
**மகள் (சுவிஸ்)** - 0041763420119
**இளையமகள் (நெதர்லாந்து)**- 0031616507110

தகவல்:
**சி.செல்வரத்தினம் (மூத்தமகன்)**
**குடும்பத்தினர்.**
**077 152 4683, 077 4716 220**

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
15.08.1986



ஆண்டவன் அடியில்
04.11.2020

## திருமதி வைத்தியர் மயூரி ஜனகன்

(De Soyza **மகப்பேற்று மருத்துவமனை, கொழும்பு**)

வேலணையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மயூரி ஜனகன் அவர்கள் 04.11.2020 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. ஜனகனின் (கணக்காளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.சிவேந்திரன் (முகாமையாளர், கூட்டுறவுச் சங்கம்), யோகலட்சுமி (யோகு) தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், திரு.பாலேந்திரன் (இளைப்பாறிய அதிபர்-சரவணை, நாகேஸ்வரி மகா வித்தியாலயம்) திருமதி பேரின்பஜானகி பாலேந்திரன் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்-யாழ் கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மருமகளும், ஷாலினியின் (லண்டன்) அன்புத் தங்கையும், யோகலிங்கம் (ஜேர்மனி), தவலிங்கம் (கனடா), கணேசலிங்கம் (திருகோணமலை) ஞானலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகளும், சாந்தலட்சுமி (வேலணை), ஞானலட்சுமி (யாழ்ப்பாணம்), ஜெயலட்சுமி (கனடா), மகாலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், திருப்பரன் (லண்டன்), வைத்தியர். துவாரகா (தேசிய வைத்தியசாலை- கொழும்பு), கல்பனா (ஆசிரியை-அரியாலை பார்வதி வித்தியாலயம்), பிரதீபா (சட்டத்தரணி) நிரூஜன் (HSBC-China) நிரூஜா (சிங்கப்பூர்) ஆகியேரின் அன்பு மைத்துனியும், தனிஷ், அஜேஸ், அக்ஷிதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தியும், சாயிரமணா (யாழ்ப்பாணம்), இலட்சியன், நிலானி (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2020) வியாழக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை இந்து மயாத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**ஜனகன் (கணவர்) 077 966 4118**
**யோகு (அம்மா) 077 662 6347**
**ஷாலினி (சகோதரி) 0044 7540 419745**
**பாலேந்திரன் (மாமா) 077 239 6101**

தகவல்:
**ஜனகன் (கண்ணா)**
**கணவர்.**

# பதவியில் தொடரும் எண்ணம் இல்லை

## மஹிந்த தேசப்பிரிய திட்டவட்டம்

கொழும்பு, நவ. 5

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் தொடர்வதற்கு அழைப்பு விடுத்தாலும் அதை ஏற்க மாட்டேன் என்று மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய ஆணைக்குழு உறுப்பினர்களான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், பேராசிரியர் நளின் அபேசேகர ஆகியோர் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 12ஆம் திகதி நள்ளிரவு 12மணியுடன் நிறைவடை யவுள்ளது.


இது தொடர்பில் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்ததாவது:

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் தற்போதைய பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் தொடரப் போவதில்லை என்று முன்னதாகவே அறிவித்திருந்தேன். அந்த முடிவில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை. திணைக்களத்தில் எனது அலுலக அறையை ஒப்படைப்பதற்குரிய உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளேன். ஆவணங்களை ஒழுங்குபடுத்தல் உள்ளிட்ட பணிகளை தற்போது முன்னெடுத்துள்ளேன் என்றார்.

இதேவேளை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், எனக்கு வழங்கப்பட்டிருந்த விடுதியிலிருந்து வெளியேறிவிட்டேன்.

தற்போது ஆணைக்குழுவில் உள்ள அலுவலகத்தை ஒப்படைக்கும் பணி மட்டுமே மீதமாகவுள்ளது. அதனையும் விரைவில் முறையாக ஒப்படைக்கவுள்ளேன் என்றார். (ஒ.இ)

# மரண அறிவித்தல்



**தோற்றம்: 11.07.1944**
**மறைவு : 04.11.2020**

## கணபதிப்பிள்ளை சேதுலிங்கம்

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சேதுலிங்கம் நேற்று (04.11.2020) புதன்கிழமை இறை வனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மகனும், நடராசா- நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், புவனேஸ் வரியின் பாசமிகு கணவரும், அற்புதமூர்த்தி (இத்தாலி), அற்புதநாதன், அற்புதநேசன் (இத்தாலி) அபூர்வபாலன், (ஆசிரியர், யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) கபிலவாணி, கபிலரூபா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தனுஷா (இத்தாலி), கலையரசி, நிருபாளினி (இத்தாலி), கவிதா (ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை), சுதாகர் (பிரான்ஸ்), ஜெயந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தயானி, தனுஷன், தருண், ஆஷ்னா, லதுன், பிரகவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2020) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11 மணியளவில் கச்சாய் எரியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் தெற்கு,**
**கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 935 6970, 077 199 2462**

# மரண அறிவித்தல்



**மண்ணில்**
**07.06.1938**

**விண்ணில்**
**04.11.2020**

## சதாசிவம் சண்முகம்

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் சண்முகம் 04.11.2020 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குணநாயகம் - தங்கமுத்து அவர்களின் பாசமிகு மருமகனும் பஞ்சவர்ணம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, வேலுப்பிள்ளை மற்றும் மாணிக்கம், பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சந்திரபாலன், அமுதபாலன் மற்றும் கேமலதா, தவபாலன் ஆகியோரின் தந்தையும், செல்வமலர், வசந்தகுமாரி, சித்திரமூர்த்தி, சிந்துஜா ஆகியோரின் மாமனாரும் வாசுகி, வரதன், வனிதா, வதனா, தேனுஜா ஆகியோரின் பேரனும் தக்ஷனா, தருண் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.11.2020) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 077 163 2847**

**தகவல் : குடும்பத்தினர்.**

# கைத்தொழிலுக்கு அபிவிருத்திக் குழு

கொழும்பு, நவ.5
உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கான அபிவிருத்திக் குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சிதிட்டத்தின் அங்கமாக இந்தக் குழு செயற்படவுள்ளது. அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையில், கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச, பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ்பத்திரன ஆகிய அமைச்சரவை பிரதிநிதிகளும் குழுவில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
இந்தக் குழு மாவட்ட ரீதியான கலந்துரையாடல்களை மேற்கொண்டு, ஒவ்வொருமாவட்டத்திலும்சாதகமாககாணப்படுகின்ற கைத்தொழில்களை முன்னேற்றிநாட்டின் அபிவிருத்திக்குவலுச்சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படவுள்ளது. (க-20)

கொரோனா மூன்றாம் அலை;

# 11 ஆயிரத்து 900 குடும்பங்கள் மேல் மாகாணத்தில் தனிமை

**கொழும்பு, நவ.5**
**நாட்டில் கொரோனா வைரஸ் பரவியதைத் தொடர்ந்து, மேல்மாகாணத்தில் 11 ஆயிரத்து 900க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.**

கொரோனா வைரஸ் நோயாளிகளின் முதல் தொடர்புகளாக அடையாளம் காணப்பட்ட 5 ஆயிரத்து 715 குடும்பங்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
நோயாளிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தொடர்புகளாகக் கண்டறியப்பட்டபின்னர்கிட்டத்தட்ட 6 ஆயிரத்து 199 குடும்பங்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக 14 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 14 பேரின்தலைமையில் இந்தக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தப்பட்ட உத்தரவை மீறுவதாகக் கண்டறியப்பட்டவர்கள் மீது நடவடிக்கைளடுக்கப்படும்-என்றார். (ப-இ)

# விபத்தில் மதகுரு சாவு

யாழ்ப்பாணம், நவ. 5
விபத்தில் காயமடைந்த மதகுரு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்புத்துறை மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த அன்ரன் ரமேஸ் சயந்தன் (வயது 26) என்பவரே நேற்று உயிரிழந்தார்.
இவர் நேற்றுமுன்தினம் மாலை 6.30 அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கைதடி நோக்கி தனது சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை, அரியாலை முள்ளி பகுதியில் விபத்து இடம்பெற்றது. அவர்கள் வீதியின் மறுபக்கம் செல்வதற்கு முற்பட்டுள்ளனர் என்றும் அதன் போதே அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் அவர்களுக்குப் பின்பாகச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்து ஏற்பட்டது என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இதன்போது மோட்டார்சைக்கிளைச் செலுத்திச்சென்றுகொண்டிருந்த மதகுரு மயக்கமடந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் யாழ்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (து-26)

## கண்ணீர் அஞ்சலி




சைவ சித்தாந்தத் துறையின் தலைவரும், இந்து நாகரிகத் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான
**கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவனேசன்**
அவர்களின் அன்பு மாமியார்
**மாணிக்கவாசகர் விசாலாட்சி**
காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**இந்துக் கற்கைகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
08 . 04 . 1952



**மறைவு**
04 . 11 . 2020

**திரு கனகசபை அருளையா**

அச்செழு வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் மகாதனை தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகசபை அருளையா நேற்று (04.11.2020) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் மனோன்மணி தம்பதியரின் மருமகனும் லீலாவதியின் (ஓய்வு நிலை அதிபர், யா/மலியிட்டி றோ.க.த. பாடசாலை முன்னாள் படவரைஞர், உள்ளூராட்சித் திணைக்களம், முன்னாள் ஆசிரியர், கொழும்பு ஹைறியா முஸ்லிம் பெண்கள் பாடசாலை, யா/அருணோதயா கல்லூரி), அன்புக் கணவரும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற அருந்தவராணி மற்றும் அருள்தேவி (ஆசிரியர், யா/ஈவினை அ.த.க. பாடசாலை), நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சபாரத்தினம், உதயகுமாரன், காலஞ்சென்றவர்களான இளையதம்பி திலகவதி காசிலிங்கம், வைத்தீஸ்வரன், சிவராசா, புஸ்பவதி மற்றும் தேவதுரை அம்பிகாவதி, காசிலிங்கம் ராணிமலர் ஆகியோரின் மைத்துனரும் நந்தகுமார், குணசாந்தன், அனுசாகரி, பார்த்திபன் லோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், துளசிதரன், கெங்காதரன் (G.S.அளவெட்டி வடக்கு), கருணாகரன், மனோகரன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2020) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் அச்செழு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அச்செழு வடக்கு,**
**நீர்வேலி.**
T.P: 077 985 6976

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அமைப்பினரால், கொரோனாத் தடுப்பு விசேடவேலைத்திட்டம் கிளிநொச்சியில்நேற்றுப்புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி நகரின் பல பகுதிகளிலும் கொரோனா விழிப்புணர்வுத் துண்டுபிரசுரங்கள் மற்றும் முகக்கவசங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. (க)

# பனங்கிழங்கு ஒன்று ரூ.10

தென்மராட்சி பிரதேச சந்தைகளில் பனங்கிழங்கு விற்பனைக்கு வந்துள்ளது. பத்து கிழங்குகள் நூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறன. கார்த்திகை விளக்கீட்டின் பின்னரே பெரும்பாலும், பனங்கிழங்கு சந்தைக்கு விற்பனைக்கு வரும். இம்முறை முன்னரே விற்பனைக்கு வந்துள்ளது. (க-9)

# இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா தொடர்ந்தும் உதவும்

இந்திய வான்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.5
இலங்கையின் வலுவான பாதுகாப்பு உறுதிப்பாட்டுக்கு இந்தியாதொடர்ந்தும்உதவும் என்று இந்திய வான்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் ராகேஷ் குமார்சிங் பதூரியா உறுதியளித்துள்ளார்.
அத்துடன்பிராந்தியபாதுகாப்புஒத்துழைப்புக்கு தொடர்ந்தும் உதவியளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
இலங்கையில்புதிதாகநியமிக்கப்பட்டுள்ள வான்படைத் தளபதி பத்திரனவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ-இ)

# கடை உடைத்து திருடினரென்று இருவர் பருத்தித்துறையில் கைது

*திருடப்பட்ட பொருள்களில் சில மீட்பு*

யாழ்ப்பாணம், நவ. 5
பருத்தித்துறை நகரில் கடை உடைத்துத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். திருடப்பட்ட பொருள்களில் சில அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உழுந்து மற்றும் சில பொருள்கள் இந்த வார ஆரம்பத்தில் திருடப்பட்டிருந்தன. அது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், சிசிரிவி. உட்பட சில ஆதாரங்களின் உதவியுடன் பொலிஸார் விசாரணை நடத்தி 24 மற்றும் 26 வயதுயை இருவரைக் கைதுசெய்திருந்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையின்படி வீடு ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் திருடப்பட்ட பொருள்கள் சில மீட்கப்பட்டன.
இவருவரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-26)

## உயிரிழப்பு...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தச் சங்கத்தின் செயலாளரான விசேட மருத்துவ நிபுணர் சேனால் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரசுக்குப் பல தடவைகள் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையின் தாக்கம் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளிவரும் தாமதங்கள் உள்ளிட்ட பல விடயங்களைச் சுட்டிக்காட்டிய போதிலும் உரிய தீர்வு கிடைக்கவில்லை. இப்படியே சென்றால் முழு நாடுமே மீண்டும் முடக்கப்படும் அபாயம் அல்லது உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் அபாயமே ஏற்படும்.

எனவே, மக்கள் நலன் தொடர்பில் உடனடியாக அரசு கவனம் செலுத்த வேண்டும்" என்றார். (த-22)

## கொரோனா சாவு...

யில் வயோதிபர்கள் இருவர் உயிரிழந்துள்ள நிலையில், ஒருவரது இறப்பையே கொரோனா உயிரிழப்பாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கொழும்பு 13 ஐச் சேர்ந்த 79 வயதுடைய பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் தனது வீட்டில் உயிரிழந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நீண்டகால நோயால் பீடிக்கப்பட்டிருந்த அந்தப் பெண் சுமார் ஒரு மாதத்துக்கும் அதிகமாக வீட்டிலேயே இருந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அவர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பால் ஏற்பட்ட மாரடைப்பு காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவரது இறப்பு இலங்கையில் 24 ஆவது கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட இறப்பாகப் பதிவாகியுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு 13 ஐச் சேர்ந்த 78 வயதுடையவர் தனது வீட்டில் தவறி வீழ்ந்து தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த திங்கட்கிழமை கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரின் உடற்கூற்றுப் பரிசோதனையில் அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் அவரின் இறப்பு கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்படாத காரணத்தால் அதனைக் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்பட்ட இறப்பாகக் கருத முடியாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-22)

## மாவட்டத்துக்குள்...

யுள்ளது. பொதுப்போக்குவரத்தால் கொரோனாத் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று கிளிநொச்சி மாவட்ட பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் நா.நகுலராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தினர் இணைந்து குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

இருந்தபோதிலும் வெளி மாகாணங்களிலிருந்து போக்குவரத்துக்களை நிறுத்துவதற்கு அந்தந்த மாவட்டங்களின் தனியார் பஸ் உரிமையாளர்களும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பொதுப் போக்குவரத்தின் ஊடாக கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச பஸ்களும் வெளி மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்களை மட்டுப்படுத்தியுள்ளன. இந்த நிலையில் இனிவரும் காலங்களில் மாவட்டங்களுக்கு இடையில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையை வழங்குவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் கோரினார். (த-20,6)

## கொரோனா...

தென்பகுதியில் கொரோனாத் தொற்றுடையவர்களுடன் தொடர்புபட்டனரென்ற அடிப்படையில் 18 பேரும் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 18 பேரே கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஆண்கள்.

கொழும்பு அமைச்சின் அறிவுறுத்தலின்படி அவர்களுக்கு அங்கு சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மருத்துவமனையில் அடுத்தடுத்த கட்டங்களில் மேலும் பலர் சேர்க்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த.ஓ.26)

## நாட்டரிசி...

டுள்ளது.

அதன்படி அதிகபட்ச சில்லறை விலைகளாக, சம்பா வெள்ளை/சிவப்பு அரிசி 94 ரூபாவாகவும் பச்சை சம்பா, சிவப்பு சம்பா அரிசி 94 ரூபாவாகவும், நாட்டரிசி 92 ரூபாவாகவும், பச்சை, சிவப்பரிசி 89 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வர்த்தகர்கள் இந்த விலைக்கே மேற்குறித்த அரிசி விலைகளை விற்பனை செய்யவேண்டும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## நோயறி...

Diagnostic Test Kits) ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் சரக்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன.

தென்கொரியாவின் தலைநகர் சியோல் நகரில் இருந்து இவை இலங்கைக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனைகளை விரைவுபடுத்த இவை கொண்டுவரப்பட்டுள்ளன என்று அரச தரப்புத் தகவல்கள் கூறியுள்ளன. (த-இ)

## கொரோனா 12,000...

நேற்று மாத்திரம் 443 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் தொடர்புடைய தொற்றாளர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 691 ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஒரு மாதத்தில் இந்த எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 187 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 6 ஆயிரத்து 305 தொற்றாளர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 5 ஆயிரத்து 858 பேர் குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வீடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-22)

## தேசியப் பட்டியலில்...

ராஜபக்ச தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் காணொலி ஒன்றைப் பதிவிட்டு இதனைக் கூறியுள்ளார்.

"நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கையளித்த தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலில் பஸில் ராஜபக்சவின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அவர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிக்கச் சட்டம் அனுமதியளிக்காது." என்றும் நாகானந்த கொடிதுவக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (த-22)

## பஸ்களில்...

தத்தம் பஸ்களின் இலக்கங்களை பஸ்களின் உட்புறத்தில் கட்டாயமாகக் காட்சிப்படுத்த வேண்டும் என்றும் பணித்தார். வடக்கு மாகாணத்தில் கொவிட் தொற்று இடர் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது. அதில் மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

சுகாதார அமைச்சு வெளியிடும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய முறைகளை தீர்மானிக்க வேண்டும். அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம அலுவலர்கள், சுகாதாரத் துறையினர் மற்றும் பொலிஸாரை ஒன்றிணைத்து கொவிட் - 19 சுகாதார வழிகாட்டல்களை முறைப்படி கடைப்பிடித்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணித்தார்.

மருத்துவமனைக் கழிவுகளை அகற்றும் முறை தொடர்பாக பொதுவான ஒரு திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும். அத்துடன் மாணவர்களிடையேயும் கொவிட் 19 சுகாதார நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டச் செயலாளர்கள், மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி, பொலிஸார் மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (த-111,20)

## மர்மமான...

முறையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

விஜி என அழைக்கப்படும் எஸ்.விஜியேந்திரன் (வயது55) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று இலுப்பைக்கடவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் கடமை முடிந்து தனது வீடு நோக்கிச் சென்றுள்ளார். அதன்பின்னர் கள்ளியடி ஆத்திமோட்டை பகுதியில் தாக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளார்.

இவரது தலை மற்றும் உடல் பாகங்களில் பெரியளவிலான காயம் காணப்படுகின்றது. இவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் பள்ளமடு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மன்னார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்தார் என்று இலுப்பைக்கடவை பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் நடந்த பகுதிக்கு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் இ.கயஸ்பல்டானோ நேற்றுப் புதன்கிழமை மதியம் சென்று பார்வையிட்டு, விசாரணைகளை மேற்கொண்டார்.

சட்ட மருத்துவ அதிகாரி எஸ்.பிரணவன், திடீர் இறப்பு விசாரனை அதிகாரி றொஜன் ஸ்ரலின் ஆகியோரும் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தனர். கிராம அலுவலர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் தலைக்கவசம் என்பன குருதிக்கறையுடன் காணப்பட்டன. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று தெரிவித்த பொலிஸார், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தனர். (எ-56)

## யானை...

தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், திருமணம்செய்து கொடிகாமம் மத்தி, பெரியநாவலடி, செட்டியாவெளி பகுதியில் வசித்துவருகின்றார் என்று அந்தப் பகுதி கிராம அலுவலர் நேற்றிரவு உறுதிப்படுத்தினார்.

அவர் தச்சு வேலைக்காக முல்லைத்தீவு மல்லாவி கொல்லவிளாங்குளம் பகுதிக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து நேற்றுமுன்தினம் இரவு 10.15 அளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

மாங்குளம் நகர்ப்பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் திடீரென வீதியின் குறுக்கே வந்த யானையுடன் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளார். யானை மோட்டார் சைக்கிள் மீதும், விஜியானந்தன் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது. அதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் பொலிஸார் விசாரணை நடத்தினர். விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிம் ஒப்படைக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-26,159)

முதலாம் பக்க தொடர்ச்சி...

## உடுவில்....

சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சிறுவன் யாழ்ப்பாணத்துக்கு கடந்த மாதம் 29ஆம் திகதி வந்துள்ளான். சிறிமுருகன் பேருந்திலேயே வந்துள்ளான். அந்தப் பேருந்தில் 28பேர் வரையில் பயணித்துள்ளனர். அவர்களின் விவரங்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. பேருந்தில் பயணம் செய்தவர்களில் 3பேர் அநுராதபுரத்தில் இறங்கியுள்ளனர். எஞ்சிய 25பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் 20 பேர் வரையில் நேற்று இரவு வரையில் கண்டறியப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட சிறுவன், மருதங்கேணியில் இயங்கி வரும் கொரோனா சிகிச்சை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளான்.

இதேவேளை, கிளிநொச்சி கண்டாவளையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபர் மூன்று பேருந்துகளில் பயணித்தே, கொழும்பிலிருந்து வீடு வந்துள்ளார். இவர் பயணித்த மூன்று பேருந்துகளின் விவரங்களும் வெளியிடப்பட்டு அதில் பயணித்தவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தோம். இதற்கு அமைவாக இருவர் மாத்திரமே தமது விவரங்களைப் பதிவு செய்துள்ளனர், என்றார். (ஓ.5)

## அமெரிக்க...

வொஷிங்டன், நவ. 5

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெண்ணும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. நேற்று நள்ளிரவு வரையிலான நிலவரத்தின்படி ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பிடென் அதிக தொகுதிகளைக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளார். அவரே அமெரிக்க ஜனாதிபதியாக வெற்றிபெற வாய்ப்புள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

வெற்றிக்கு 270 தொகுதிகள் தேவை என்ற நிலையில் பிடென் இதுவரை 238 தொகுதிகளையும், ட்ரம்ப் இதுவரை 213 தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளனர். ஆனால் வெள்ளைமாளிகைக்கான பந்தயத்தில் வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கிய மாநிலங்களில் ட்ரம்ப் பிடென் இருவருக்கும் இடையே மிக நெருக்கமான கடும் போட்டி நிலவுவதாக செய்திகள் வருகின்றன.

முடிவுகள் பரபரப்புடன் வெளியாகிவரும் நிலையில் ட்ரம்ப் இடையில் புகுந்து குழப்பத்தை ஏற்படுத்தும் விதமான அறிவிப்புகளை வெளியிட்டுவருகிறார். இலங்கை நேரப்படி நேற்று மதியம் 12.30 மணியளவில் 'நாங்கள் வெற்றியீட்டிவிட்டோம்' என்று அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.


சற்று நிமிடத்தில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய ஜோ பிடேன், "வெற்றிக்கான பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம். எனினும், பொறுத்திருங்கள்" என்று தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் பிடென் தொடர்ச்சியாக முன்னிலையில் இருந்துவந்த நிலையில், தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய ட்ரம்ப், "இந்தத் தேர்தலில் பெரும் முறைகேடு இடம்பெற்றுள்ளது. இது அமெரிக்க ஜனநாயகத்துக்கு விழுந்த அடி. அமெரிக்க உயர்நீதிமன்றத்தை நாடி வாக்கெண்ணும் பணிகளை நிறுத்தவுள்ளேன்" என்று தெரிவித்தார்.

இதையடுத்து அமெரிக்கத் தேர்தல் தொடர்பில் பெரும் பரபரப்பு நிலை நிலவுகின்றது. (ம-இ)

# அடுத்த சீசனில் டோனி "400"!

### கவாஸ்கர் நம்பிக்கை



புதுடில்லி, நவ.5

சென்னை சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர் எம்.எஸ் டோனி அடுத்த ஐ.பி.எல். தொடரில் 400 ஓட்டங்கள் பெறுவார் என்று சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் ஐ.பி.எல் 13 ஆவது தொடர், சென்னை சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர் எம்.எஸ் டோனிக்கு சரியாக அமையவில்லை. முதல் இரண்டு மூன்று ஆட்டங்களில் மிகவும் பின்வரிசையில் களம் இறங்கினார். சில ஆட்டங்களில் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனால் அடுத்த ஐ.பி.எல். தொடரில் விளையாடுவாரா? என்ற சந்தேகம் கூட எழுந்தது. ஆனால் சென்னை அணியின் உரிமையாளர் காசி விஸ்வநாதன் அடுத்த தொடரிலும் டோனிதான் அணித் தலைவர் என்று தெரிவித்துள்ளார். டோனியும் பஞ்சாப் அணிக்கெதிரான ஆட்டம் இறுதி ஆட்டம் இல்லை என்று கூறியிருந்தார். அதனால் 2021 தொடரிலும் டோனி விளையாடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் 2021 தொடரில் டோனியால் 400 ஓட்டங்கள் பெறமுடியும் என்று சுனில் கவாஸ்கர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ற)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
இன்னும் 04 நாட்களே
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

## வோட்சன் ஓய்வு

புதுடில்லி, நவ.5

கிரிக்கெட் வரலாற்றில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு என்று சல துறைகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வரும் வோட்சன் தனது ஓய்வு தொடர்பாக அறிவித்துள்ளார்.

இந்த வருட ஐ.பி.எல் போட்டியில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தின் பின்னர், இவர் சி.எஸ்.கே. அணி நிர்வாகத்திடம் ஓய்வு தொடர்பாகத் தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக விளையாடி வருகின்றார் வோட்சன். இந்த நிலையில் நேற்று முன்தினம் காணொளி மூலம் தன்னுடைய ஓய்வை அறிவித்துள்ளார். அதில், நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். கடந்த 3 ஆண்டுகள் எனது கிரிக்கெட் வாழ்க்கை சிறப்பாக அமைந்தது என்று தெரிவித்ததுடன் சி.எஸ்.கே. ரசிகர்களுக்குத் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (ற)



## இம்ரான் மீது நவாஸ் "பகீர்" குற்றச்சாட்டு!

ரியாத், நவ.5

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய பிரதமருமான இம்ரான் கான் மீது பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சர்பராஸ் நவாஸ் கடும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

1970 ஆம் ஆண்டு மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக நவாஸ் மற்றும் இம்ரான் ஆகியோர் விளையாடியுள்ளனர்.

இந்தநிலையில் பாகிஸ்தான் செய்தி அலைவரிசை ஒன்றுக்கு பேட்டி அளித்த நவாஸ், இம்ரான் கான் போதைப்பொருள் பயன்படுத்துவார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

1987 ஆம் ஆண்டில், பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்தை எதிர்கொண்ட போது பந்து வீசிய இம்ரானுக்கு சில சிரமங்கள் இருந்தன. பாகிஸ்தானுக்கு திரும்பியதும், இம்ரான், தனது வீட்டுக்குச் சென்று போதைப்பொருள் உட்கொண்டார் என்று நவாஸ் தெரிவித்துள்ளார். (ற)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ஊரெழு கரந்தன் குறுக்கு றோட் நீர்வேலி மேற்கு ராசா கடை அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மற்றும் 44 பரப்புக் காணி ஊரெழு ஆனந்தகாமம் பகுதியில் உள்ளது. பிரித்து கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
தொடர்பு:
076 6400 974, 077 8949 549

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் பலாலி றோட் கோண்டாவிலில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. கோண்டாவில் சந்திக்கு அருகாமை.
தொடர்பு:
074 075 4204, 077 6234 204

A/L Physics
*. Personal Class
*. Group Class
*. Zoom Class வும் கற்கலாம்.
ஆசிரியர்:- திரு. M.ஸ்பெல்மன் (BSc,PGDE) Jaffna Town
தொடர்புகளுக்கு: 077 611 6724
ZOOM ID-210 454 2884
PW-MSI 39 spe

வேலை வாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சர்வதேச நிறுவனம் ஒன்றில் பணி புரிவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.....
நீங்கள் A/L பரீட்சையை எழுதி உள்ளீர்களா?
இவ் வேலைவாய்ப்பு சம்பந்தமாக "Online Webnaire" இல் பங்குபற்ற விரும்புபவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்: 076 2855 601



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.